
UNIVERSITY OF JAFFNA
LIBRARY
09 JUL 2011
PERIODICALS DIVISION

Saturday
# மெயில்
சැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin

02 - 91
09-07-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=



# 2031இல் சந்திக்கலாம்!

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உலகை வியக்க வைத்த குழந்தை




இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் பிறந்த குழந்தையின் பெயர் எலிஸ்ஹோப்ஸ். ஆண் குழந்தை. குழந்தை பிறந்ததும் உயர் அதிகாரியான தாயும் விமானியுமான தந்தையும் சராசரி பெற்றோரைப் போலவே மகிழ்ச்சியில் திளைத்தார்கள். இந்த மகிழ்ச்சி முதல் ஐந்து தினங்கள் மட்டுமே நீடித்தது. ஆறாவது நாள் மருத்துவ பரிசோதனைக்கு குழந்தையைக் கொண்டு சென்றபோது குழந்தையின் உதட்டில் நீலம் பாய்ந்திருந்ததை மருத்துவமனை தாதி கவனித்தார்.

குழந்தை உடனடி சிகிச்சைக்காக குழந்தை நல சிறப்பு மருத்துவர்கள் அடங்கிய குழுவிடம் எடுத்துச் செல்லப்பட்டது. குழந்தையின் இரத்தத்தில் ஓட்சிசனின் அளவு குறைந்துபோனதுதான் உதட்டின் நீல நிறத்திற்குக் காரணமென்று அவர்கள் கண்டுபிடித்தனர். இரத்தத்தில் ஓட்சிசனின் அளவு ஏன் குறைந்தது என்று ஆராயப்பட்டது. எதிரெதிர் வரும் ரயில்கள் ஒரே தடத்தில் வந்தால் என்னவாகும் என்பதற்குச் சமமான பிரச்சினை குழந்தையின் இதயத்தில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதாவது சராசரி மனிதர்களுக்கு நுரையீரலில் இருந்துவரும் இரத்தம் இதயத்தின் இடது ஆரிக்கிளுக்கு வந்து சேரும். அதற்கேற்றபடிதான் இதயம் அமைந்துள்ளது. இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டுவரும் கொண்டு செல்லும் இரத்த நாளங்களும் இந்த ஏற்பாட்டுடன் ஒத்துப்போகிற வகையில்தான் அமையப்பெற்றுள்ளன.

ஆனால், பிரச்சினைக்குரிய இந்தக் குழந்தையின் நுரையீரலில் இருந்து கொண்டு வரப்படும் இரத்தம் இதயத்தில் இடது ஆரிக்கிளுடன் இணைக்கப்படுவதற்கு மாறாக வலது ஆரிக்கிளுடன் இணைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதேநேரத்தில் இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு வந்து கொண்டு செல்லும் அனைத்து இரத்த நாளங்களும் மிகச் சரியாகவே அமைந்திருந்தன. குழந்தையின் இரத்தத்தில் ஓட்சிசனின் அளவு குறைந்து போனதற்கும் உதட்டில் நீலம் பாய்ந்ததற்கும் இதுவே காரணமெனத் தெரியவந்துள்ளது.

இந்தக் குழந்தையின் இதயம் பின்புறம் முன்பாகவும் முன்புறம் பின்பாகவும் இயற்கையிலேயே மாறியிருந்ததுதான் இந்த இடது வலது பிரச்சினைக்குக் காரணமென்று மருத்துவர்கள் தீவிர ஆய்வுக்குப்பின் கண்டுபிடித்தனர். பத்து இலட்சத்தில் ஒரு குழந்தை இதுபோன்ற குறையுடன் பிறப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். பிறந்து 8 நாட்களேயான எல்லிஸுக்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டு இதயம் சரியான நிலைக்கு மாற்றியமைக்கப்பட்டது. அறுவைச் சிகிச்சை முடிந்து 3 மாதங்கள் கடந்த நிலையில் குழந்தை மருத்துவ உலகமே வியக்குமளவுக்குத் தேறி நலமுடன் இருக்கிறது.

## 10 நிமிடத்தில் 62 ரொட்டி தின்றார்



அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில் ஆண்டுதோறும் அகில உலக சாப்பாட்டு ராமன் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டும் அதற்கான போட்டி நடந்தது. அதில் 16 பேர் கலந்து கொண்டனர்.

போட்டி தொடங்கியதும் அனைவரும் அங்கு வைத்திருந்த இறைச்சி கலந்த ரொட்டியை ஆவலுடன் தின்றனர். அவர்களில் ஜோய் என்பவர் அகில உலக சாப்பாட்டு ராமன் பட்டம் வென்றார்.


இவர் 10 நிமிடத்தில் 62 ரொட்டிகளை சாப்பிட்டு சாதனை படைத்தார். இப்பட்டத்தை இவர் தொடர்ந்து 5 ஆவது முறையாகப் பெற்றுள்ளார்.

## 40 ஆண்டுகளாக சந்திரனில் பறக்கும் அமெரிக்கக் கொடி

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு நீல் ஆம்ஸ்ரோங், புஷ், அல்டிரின் ஆகியோர் சந்திரனில் அமெரிக்காவின் தேசியக் கொடியை நாட்டி பறக்க விட்டனர். அதைத் தொடர்ந்து ஆய்வுக்காக 6 முறை சென்ற அமெரிக்க விஞ்ஞானிகள் தங்கள் நாட்டுக் கொடியை அங்கு நாட்டினர்.

இந்நிலையில் அந்தக் கொடிகள் இன்னும் அங்கு பறந்து கொண்டிருக்கின்றனவா? என்பதை அறிய கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சாந்தர் பார்பரா லிபராதியின் ஆன்னி என்பவர் ஆய்வு மேற்கொண்டார்.

அதில் அமெரிக்க விஞ்ஞானிகள் சந்திரனில் நாட்டிய 4 கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. 2கொடிகள் மட்டும் காணவில்லை. அவை சந்திரனில் வெளியாகும் வாயுக்களால் சிதைந்து கிழிந்து இருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது.



## 2031இல்...

மனிதர்கள் 2031 ஆம் ஆண்டில் வேற்றுக் கிரகவாசிகளை சந்திக்க முடியும் என ரஷ்யன் அக்கடமி ஆப் சயன்ஸ் எப்ளையிட் அஸ்ட்ரோனோமி இன்ஸ்டியூட் இன் இயக்குநர் பின்கில்ஸ்டீன் என்ற ரஷ்ய விஞ்ஞானி கூறியுள்ளார். வேற்றுக் கிரகவாசிகள் சம்பந்தமான ஆய்வினை மேற்கொள்ளும் சர்வதேச மன்றத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். உயிர்களின் தோற்றமானது அணுக்கள் உருவாகுவதை போல தவிர்க்க முடியாதது. வேற்றுக் கிரகங்களிலும் உயிரினங்கள் வாழ்கின்றன.

அவற்றை நாம் 20 வருடங்களுக்குள் கண்டு பிடிப்போம் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். நட்சத்திர மண்டலத்தில் நாம் அறிந்த வகையில் சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் 10% பூமியை ஒத்தவை. இவற்றில் நீரைக் கண்டுபிடிக்க முடிந்தால் ஏன் உயிர்களைக் கண்டுபிடிக்க முடியாதென் கேள்வியும் எழுப்பியுள்ளார். வேற்றுக் கிரக வாசிகளும் உருவத்தில் மனிதர்களை ஒத்ததாகக் காணப்படலாம் எனவும் வேறு வகையான தோல் நிறத்தினை உடையவர்களாக இருக்கலாமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் லஞ்சம் கேட்கிறார்களா?



இரண்டு குழந்தையாக இருந்தாலும் சரி,ஒரு குழந்தையாக இருந்தாலும் சரி அந்த வீட்டின் காலைப் பொழுது மிகவும் பரபரப்பாக இருக்கும்.குழந்தையை பாடசாலைக்கு அனுப்புவதற்கு போதும்,போதும் என்றாகிவிடும்.காலையில் பல் துலக்குவதில் ஆரம்பித்து ஈவினிங் வீட்டு வேலை செய்வது அத்தனைக்கும் தொல்லைப்படுத்தி விடுவார்கள்.

நான் பால் குடிக்க வேண்டும் என்றால் நீ என்னை கடைக்கு கூட்டிட்டுப் போக வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் அவர்களின் அன்றாட வேலைகள் அனைத்தையும் செய்கிறார்கள்.இப்படி குழந்தைகள் தாங்கள் செய்யும் அத்தனை வேலைக்கும் பதிலாக ஏதாவது வேண்டாத பொருளையோ அல்லது தேவையற்ற காரியங்களைச் செய்வதற்கும் லஞ்சமாக எதையாவது கேட்கிறார்கள்.குழந்தைகளின் இந்தப் பழக்கத்தை பெற்றோர்கள் எப்படிச் சமாளிப்பது?இந்தப் பழக்கம் வருவதற்கான காரணம் என்ன? என்பது பற்றி விளக்குகிறார் குழந்தைகள் மனநல ஆலோசகராகப் பணிபுரிந்து வரும் வந்தனா மனோஜ்.

குழந்தைகள் இப்படி தங்களுடைய வேலை செய்வதற்கு ஏதாவது தர வேண்டும் எனச் சொல்லும் பழக்கம் பெற்றோரிடம் இருந்துதான் வந்தது.அவர்கள்தான் ஆரம்பத்தில் குழந்தை எதையாவது செய்ய மறுத்தால் உடனே குழந்தைக்குப் பிடித்த பொருளைக் கொடுத்து அந்தக் காரியத்தைச் செய்யுமாறு சொல்கிறார்கள்.நீ பல் தேய்த்தால் நான் உனக்கு சொக்கலேட் தருவேன் என்று ஆரம்பத்தில் பெற்றோர்கள்தான் குழந்தைகளிடம் கேட்பர்ர்கள்.பிறகு குழந்தைகள் அதையே பழக்கமாக வைத்துக் கொள்கிறார்கள்.

இப்படி அவர்கள் அன்றாடம் செய்ய வேண்டிய வேலைக்கு நீங்கள் ஏதாவது கொடுப்பது என்பது மிக மோசமான பழக்கம்.இது நீண்ட கால தீர்வும் கிடையாது. இதன் விளைவாக குழந்தையும் எப்போதும் உங்களிமிருந்து எதையாவது எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும்.அதோடு உங்களையும் பரிசு வாங்கித் தரும் ஒரு மெஷினாகத்தான் பார்க்கும்.

அவர்கள் அன்றாட வேலைகளை ஏன் செய்ய வேண்டும்.அதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன?என்பதை குழந்தைக்கு புரியும் வகையில் சொல்ல வேண்டும்,ஆரம்பத்தில் கடினமாகத்தான் இருக்கும்.குழந்தைக்குப் புரியும் வரை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.குழந்தைகளுக்கு எந்த சமயத்திலும் நீ இதைச் செய்தால் நான் உனக்கு இதை வாங்கித் தருகிறேன் என வாக்கு கொடுக்கக் கூடாது.அப்படி வாக்கு கொடுத்தால் அதை வாங்கிக் கொடுத்தே தீர வேண்டும்.ஏனெனில் வாங்கித் தரவில்லை எனில் உங்களைப் பற்றி குழந்தைகள் தன்னுடைய நண்பர்களிடம் தவறாக பேசுவார்கள்.

பாராட்டுகள் அனைத்தும் வாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும்.குழந்தைகள் ஏதாவது சாதித்தால் உங்களுக்கு தோன்றினால் மட்டும் குழந்தைகளுக்கு தேவைப்படுவதை வாங்கிக் கொடுக்கலாம்.அதையும் முன்கூட்டிச் சொல்லக் கூடாது.அப்படிச் சொன்னால் எனக்கு தேவையான பொருள் கிடைக்கிறது.அதற்காக இதை நான் செயதே தீரவேண்டும் என்ற எண்ணம்தான் வளருமே தவிர வேறு எந்தவிதமான வளர்ச்சியும் இருக்காது.அடிக்கடி பரிசு வாங்கித் தருவதால் குழந்தைகள் பரிசுகளின் அடிமையாகிவிடுவார்கள்.அது இல்லாமல் எதுவும் நடக்காது என்றாகிவிடும்.நம்மிடம் எதிர்பார்ப்பதைப் போலவே மற்றவர்களிடத்திலும் குழந்தைகள் எதிர்பார்ப்பார்கள்.அதோடு அப்படி மற்றவர்களிடமிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்றால் அதுவே அவர்களை மனச்சோர்வு அடையச் செய்யும்.இந்த மனச்சோர்வு பல பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்பதை பெற்றோர்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

சின்ன சின்ன விடயங்களுக்குக் கூட குழந்தைகள் பரிசை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.அந்தச் சமயத்தில் குழந்தையை சமாதானம் செய்ய நான் வாங்கித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு வாங்கிக் கொடுக்காமல் இருந்தால் அது தவறு.நாம்தான் குழந்தைகளின் முதல் ரோல்மாடல்.நாளை குழந்தையும் நம்மைப்போலவே வாக்கு கொடுக்கும்.ஆனால் செய்யாது.மேலும் வீட்டில் இரண்டு குழந்தைகள் இருந்தால் ஒரு குழந்தை திறமையாக ஏதாவது செய்தால் அதற்கு நீங்கள் பரிசு வாங்கிக் கொடுக்கிறீர்கள் என்றால் மற்றொரு குழந்தையிடம் இருக்கும் நல்ல விடயத்தை கண்டுபிடித்து அதற்கு பரிசு வாங்கிக் கொடுக்க வேண்டும்.இந்தச் சமயத்தில் நீங்கள் மேலும் ஒன்றைச் செய்ய வேண்டும்.

திறமையை வெளிப்படுத்திய குழந்தையிடம் அவளுக்கு வாங்கித் தரவில்லை என்றால் அவள் வருத்தப்படுவாள் என்பதை தெளிவாகச் சொல்லி புரியவைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்து விழா

பெண்ணொருவர் தனது விவாகரத்தை மிக விமர்சையாக கொண்டாடிய சம்பவம் சீனாவில் இடம்பெற்றுள்ளது. இவர் தனது சந்தோஷமற்ற 27 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்ததையடுத்து இவ் விவாகரத்து நிகழ்வை கொண்டாடியுள்ளார்.



சீனாவின் ஷாங்காய் மாகாணத்தின் தலைநகரமான தையுவாயிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இவ்விழாவை யுவான் லீ எனும் இப்பெண் ஏற்பாடு செய்திருந்தார்.

அன்றைய தினம் மேற்படி யுவான் லீயும் அவரது 3 பிள்ளைகளும் அவர்களது தொடர்மாடி குடியிருப்பிலிருந்து காரொன்றின் மூலமாக யுவான் லீயின் தாயின் வீட்டிற்கு முதலில் சென்றனர். 'நான் எனது வீட்டிலிருந்து 28 வருடங்களுக்கு முன்பாக எனது கணவரால் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டேன். தற்போது நான் பெருமையுடன் வீடு திரும்பியுள்ளேன்' என்று அப் பெண் தெரிவித்தார்.

பின்னர் அங்கிருந்து அவர்கள் விவாகரத்து வைபவம் நடைபெறும் ஹோட்டலுக்குச் சென்றனர். விவாகரத்து வைபவம் இப்போது ஆரம்பமாகிறது என அறிவிப்பாளர் மகிழ்ச்சியுடன் அறிவிக்க விழா தொடங்கியது. பிரதான மேடையில் நின்று யுவான் லீ இந்த விவாகரத்து வைபவம் என்னை மகிழ்வூட்டுகின்றது. இது கடந்த காலத்திற்கான விடுதலை நாள் இனி நான் மகிழ்வுடன் எனது பிள்ளைகளுக்காக வாழ்வேன் என்று தெரிவித்தார். திருமண உறுதி மொழிக்குப் பதிலாக விவாகரத்து உறுதிமொழி வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது.

அறிவிப்பாளர், யுவான் லீயிடம் யார் மீது அன்பு செலுத்துவதற்கு உங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தீர்களோ இன்றிலிருந்து உங்கள் வாழ்க்கையில் அவருக்கு எந்த பங்குமில்லை செல்வச் செழிப்பிலும் ஏழ்மையிலும் ஆரோக்கியத்திலும் துரத்தப்பட்டாலும் நேசிக்கப்பட்டாலும் அவருடன் உங்களுக்கு எந்த உறவுமிருக்காது இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? எனக் கேட்டார். அதற்கு யுவான் லீ நான் ஏற்றுக்கொள்கிறேன் என பதிலளித்தார். பின்னர் யுவான் லீ மேடையிலிருந்து திருமண புகைப்படங்களை கிழித்தெறிந்ததுடன் அவரது திருமண மோதிரத்தை மீன் தொட்டிக்குள் தூக்கியெறிந்து திருமண வாழ்க்கையிலிருந்து விடைபெறுவதாக அறிவித்தார்.

# காதலுக்கு புதன் - உறவுக்கு வியாழன்

இயந்திர மயமாகிவிட்ட இன்றைய வாழ்க்கைச் சூழலில் இரவு பகல் பாராமல் உழைக்கத்தொடங்கிவிட்டனர் இளைய தலைமுறையினர். நல்லநாள் நல்லநேரம் பார்ப்பதெல்லாம் திருமணம் மற்றும் சுபகாரியங்களுக்கு மட்டுமல்ல நாம் செய்யும் எந்த ஒரு காரியத்திற்கும் நாள் பார்த்து தொடங்கினால் அது வெற்றிகரமாக முடியும் என்று லண்டன் ஸ்கூல் ஒப் எக்னோமிக்ஸ் வெளியிட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.


ஆய்வு விபரம் உங்களுக்காக;

**பதற்ற திங்கள்**

திங்கட்கிழமை என்பது உலகம் முழுவதுமே பதற்றம் ஏற்படுத்தும் தினமாகவே உள்ளது.விடுமுறை முடிந்து வேலைக்கு செல்வோரும் சரி பாடசாலை கல்லூரிக்குச் செல்வோரும் சரி அனைவருக்குமே திங்கட்கிழமை என்பது படபடப்பான நாளாக இருப்பதாகவே தெரிவித்துள்ளனர்.எனவே திங்கட்கிழமை மன அமைதியை ஏற்படுத்தும் நாளாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்பது ஆய்வாளர்களின் அறிவுரை.

**திட்டமிடல் செவ்வாய்**

வீடோ,அலுவலகமோ எதுவென்றாலும் திட்டமிட ஏற்றநாள் செவ்வாய்க்கிழமை உகந்தநாள் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். திங்கட்கிழமையின் பதற்றம் முடிந்து வழக்கமான பணிக்கு திரும்பியிருப்பார்கள்.எனவே செய்யவேண்டிய காரியங்களை திட்டமிட்டுக்கொள்ளலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.மேலும் வாரத்தின் தொடக்கம் என்பதால் நமது மூளையின் இடப் பக்க இயக்கச் செயல்பாட்டின் ஆதிக்கம் அதிகம் இருக்கும்.எனவே வழக்கமான பணிகளை செய்வதற்கு செவ்வாய்க்கிழமை உகந்த நாள் என்றும் தெரிவிக்கிறது.தொழிலாக மற்றும் மனோதத்துவ ஆராய்ச்சி முடிவு.



**காதல் புதன்**

முதல்முதலாக காதலைச் சொல்ல புதன் கிழமை உகந்த நாள் என்று தெரிவிக்கின்றனர் ஆய்வாளர்கள்.காதலர்கள் சந்தித்துக்கொள்ளவும் முதல் டேட்டிங்கிற்கும் சம்மதம் பெறவும் ஏற்றநாள் புதன்தான் சிறந்தநாள் என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது.அந்த ஆய்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த 8 ஆயிரம் பேரில் 40 சதவிகிதத்தினர் காதல் செய்வதற்கு உகந்தநாளாக புதன்கிழமையையே தேர்வு செய்துள்ளனர்.

இவையெல்லாவற்றையும் விட அலுவலகத்தில் புரமோஷன் அல்லது சம்பள உயர்வு குறித்து மேலதிகாரியிடம் பேச புதன்கிழமைதான் முதல் தெரிவு என்று அடித்துக்கூறுகின்றனர் ஆய்வாளர்கள். வாரத்தின் நடுப்பகுதி என்பதால் மேலதிகாரிகள் அல்லது முதலாளிகள் பதற்றம் குறைந்து காணப்படுவார்கள் என்பதால் நமது கோரிக்கைக்கு சாதகமாக பலன் கிடைக்கும் என்கிறது லண்டனில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பல ஆராய்ச்சிகளின் முடிவுகள்.

**உறவுக்கு வியாழன்**

உறவுகொள்ள ஏற்றநாள் வியாழக்கிழமை என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டேட்டிங் வெள்ளி- பீச்சுக்கு சனி வெள்ளிக்கிழமை மாலை அல்லது சனிக்கிழமை தங்களது காதலன் அல்லது காதலியை சந்திக்கலாம் அல்லது டேட்டிங் குறைந்தபட்சம் பீச் அல்லது சினிமாவுக்காவது போகலாம் என்பதை முடிவு செய்து கொள்ள இரண்டு மூன்று நாட்கள் அவகாசம் இருப்பதால் அநாவசிய மனமுறிவு ஏற்படாது என்றும் ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை ஓய்வெடுக்க ஏற்ற நாள் என்றும் கூறப்பட்டுள்ளது.என்ன, காதலைச் சொல்லவேண்டும் என்று நினைப்பவர்கள் எல்லாம் இப்போதே புதன்கிழமை எப்பொழுது வரும் என்று யோசிக்க ஆரம்பித்து விட்டீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீசல் எரியும் பெற்றோல்

இலங்கையில் கடந்த சில நாட்களாக பெற்றோல் பிரச்சினை தீயாய் எரிந்து கொண்டிருக்கின்றது. தரங்குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்த் அரசு அதனை மக்களுக்கு விநியோகித்ததன் விளைவை இன்று அரசும் மக்களும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள வாகனங்கள் திடீரென செயலிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கார், மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் போன்ற வாகனங்களே பெரும்பாலும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளன.

இவ்வாறு வாகனங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு கடந்த சில தினங்களாக உபயோகிக்கப்பட்ட பெற்றோலே காரணமென சாரதிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, கடந்த மாதம் இலங்கையில் பெற்றோல் மற்றும் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. ஒரு லீற்றர் ஒக்டேன் பெற்றோலின் விலை 10 ரூபாவினால் அதிகரித்து 125 ரூபாவிற்கும் டீசல் 3 ரூபாவால் அதிகரித்து 76 ரூபாவிற்கும் விற்கப்பட்டிருந்தமையும் போக்குவரத்துப் பிரிவினர், சாரதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன் இவற்றுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

பெற்றோல் நிரப்பு நிலையங்களில் அண்மையில் ஏற்பட்டிருந்த கோளாறின் காரணமாகவே தமது வாகனங்கள் ஒழுங்காக இயங்கவில்லை என வாகன சாரதிகள் முறையிடுகின்றனர். இது தொடர்பாக மருதானையிலுள்ள முச்சக்கர வண்டி சாரதியொருவர் கூறுகையில்;

கடந்த இரண்டு வாரமாக எனது முச்சக்கர வண்டியில் ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளதை என்னால் உணரமுடிகிறது. வழமைக்கு மாறாக பெற்றோலும் அதிகமாக விரயமாகிறது. இதற்கான காரணத்தை கண்டுகொள்ள முடியாதுள்ளது.

நான் தினமும் எனது வேலையை முடித்து விட்டு வீடு செல்லும் போது 170 ரூபாவிற்கு எரிபொருள் நிரப்பிக் கொள்வேன். அதன் பின்னர் கொடிகாவத்தையில் உள்ள எனது வீட்டுக்கும் சென்று மறுநாள் கிராண்ட்பாஸுக்கு வந்து ஐந்து, ஆறு சவாரி செய்து ஒரு தொகைப் பணம் சேர்க்கும் வரை பெற்றோல் மீதமாக இருக்கும்.

ஆனால் கடந்த இருவாரங்களில் இதில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எவ்வாறெனில் கடந்த இரு வாரமாக பெற்றோல் அதிகளவு விரயமாகிறது. அத்தோடு வாகனம் சென்று கொண்டிருக்கும் போது திடீரென வாகனம் அப்படியே செயலிழந்து நிற்கும். பின்னர் பலமுறை முயன்றே வாகனத்தை இயக்க வேண்டியுள்ளது. இதனாலே பல லீற்றர் பெற்றோலை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று தெமட்டகொட பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றின் முகாமையாளரொருவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த இரண்டு வாரங்களாக பெற்றோலில் இயங்கும் வாகனங்கள் திடீரென செயலிழப்பதும் வாகனத்திலிருந்து பெற்றோல் விரைவில் முடிவடைவதுமான பிரச்சினைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எமது பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு மாத்திரம் சுமார் 30 பேர் வரை இவ்வாறு முறையிட்டுள்ளனர். இவ்வாறாக வாகன சாரதிகள் கூறுவதில் பொய்யில்லை. உண்மைதான். ஏனென்றால் எமது நிலையத்திலுள்ள பெற்றோல் நிரப்பும் பம்பியிலும் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டது.

அதாவது அந்தப் பம்பியில் பெற்றோல் இடையிடையே நின்று நின்று வந்தது. பெற்றோல் பம்பியில் அடைப்பு ஏற்பட்டுள்ளது பின்னர்தான் அவற்றைத் திருத்தினோம். மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டி, கார்களிலே இவ்வாறான பிரச்சினை ஏற்படுவதாக சாரதிகள் கூறினர்.

அண்மையில் எமது எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்த பெற்றோலில் ஏதோவொரு பிரச்சினை உள்ளது என்பதை உணர்ந்தேன். ஆனால் அது என்னவென சரியாக கூறமுடியாமல் போனது.

பெற்றோல் நிரப்பு நிலையங்களிலுள்ள களஞ்சியசாலைகள் சுத்தப்படுத்தப்படாமையாலேயே இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. இதில் உண்மையேதும் இல்லை. ஏனென்றால் நாம் சிறந்த முறையில் சுத்தப்படுத்தியே களஞ்சியசாலைகளை வைத்திருக்கின்றோம். அத்தோடு தினமும் அதனை பரிசோதித்துப் பார்ப்போம். அதில் நீர் கலந்திருந்தால் எமக்குத் தெரியாமல் இருக்காது. அவ்வாறு நீர் கலந்திருந்தாலும் எல்லாப் பகுதிகளிலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் கூறினார்.

கொழும்பு தலைநகர் பகுதியில் மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலுமுள்ள பெற்றோல் நிரப்பு நிலையங்களிலும் இந்த நிலை தோன்றியுள்ளதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு இருப்பின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்படும் சுத்தமின்மையோ மழை நீரோ காரணமாக இருக்க முடியாது. நிச்சயமாக அரசாங்கத்தினால் இறக்குமதி செய்த பெற்றோலிலேயே கலப்படம் இடம்பெற்றுள்ளது. இதனால்தான் வாகனங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள களஞ்சியத்தாங்கிகளிலே படிவுகளும் மழைநீரும் எரிபொருட்களில் கலந்துள்ளமையினாலே வாகனங்கள் திடீரென செயலிழப்பதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்;

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இரு வாரத்திற்கு ஒருமுறையே எரிபொருள் இருப்பை கவனத்தில் எடுப்பதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சர்வதேச சந்தையில் விலை மனுக்களை தாக்கல் செய்யும் சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொண்ட திடீர் சுத்திகரிப்பு வேலைகளினால் நாட்டில் ஓரளவு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்காகவே அவசரமாக எரிபொருள் இறக்குமதி செய்ய வேண்டி ஏற்பட்டது.

இதன்காரணமாக எரிபொருள் இறக்குமதி செய்ய விண்ணப்பித்த போது வழமையாக எரிபொருள் விநியோகிக்கும் நிறுவனம் 5 நாள்கால அவகாசம் கோரியது. இதனாலே வேறொரு நிறுவனத்திடமே அவசர தேவைகளுக்காக எரிபொருள் இறக்குமதியை மேற்கொண்டோம்.

வேறு நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருளும் முறையாக சுத்திகரிக்கப்பட்டது.

எனினும் சில பகுதிகளிலே வாகனங்கள் செயலிழந்ததாக எமக்கும் முறைப்பாடுகள் கிடைத்தன.

அத்தோடு 16 எரிபொருள் நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் மாதிரியை வைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் சில எரிபொருள் நிரப்பு நிலைய தாங்கிகளில் படிவுகள் மற்றும் மழை நீர் கலந்திருந்தமை தெரிய வந்தது. மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

மேலும் சர்ச்சைக்குரிய இறக்குமதி செய்யப்பட்ட 20 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுக்குரிய (ஒக்றன் 90) கொடுப்பனவுகளை உடனடியாக இடைநிறுத்துமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை, பெற்றோல் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.





இதுவரை காலமும் பெற்றோல் விலையை அடிக்கடி அரசு அதிகரித்திருந்தாலும் தரமான பெற்றோலையே விநியோகித்து வந்தது. ஆனால், இம்முறை தரங்குறைந்த பெற்றோலை விநியோகித்து பொதுமக்களின் சாபங்களைப் பெற்றுள்ளது. தரங்குறைந்த பெற்றோல் இறக்குமதி தொடர்பில் சில நடவடிக்கைகள் அரசினால் எடுக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்களுக்கு அரசு என்ன நிவாரணத்தை வழங்கப் போகின்றது?

வழக்கம் போலவே இந்த மோசடியும் மூடிமறைக்கப்பட்டு விடும். மக்களும் வழக்கம் போலவே மறந்து விடுவார்கள். எதிர்க்கட்சிகளும் கிடைத்த வரை லாபமென இந்தப் பிரச்சினையை அரசியலுக்குப் பயன்படுத்தி விட்டு வேறு பிரச்சினைகளைத் தேடிக் கொண்டிருப்பார்கள். இலங்கை அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

எச்.ஹூஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்களுக்கு அவசியமான வெந்தயம்

செக்ஸ் வாழ்க்கைக்குப் பலம் கூட்டவும் வலுவூட்டவும் ஏகப்பட்ட மருந்துகள், உபாயங்கள் உள்ளன. இந்த வழியில் வெந்தயத்திற்கு செக்ஸ் உணர்வுகளை அதிகரிக்கும் மற்றும் செக்ஸ் உறவுகளை வலுவூட்டக் கூடிய சக்தியிருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆண்களின் செக்ஸ் ஓமோனை இது தூண்டுவிக்க உதவுகிறதாம்.

வெந்தயம், இந்திய உணவு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. வெந்தயத்தை வைத்து ஏகப்பட்ட உணவுப் பயன்பாட்டை இந்திய மக்கள் கடைப்பிடிக்கின்றனர். ஆனால், இந்த வெந்தயத்திற்கு செக்ஸ் வாழ்க்கையை சுறுசுறுப்பாக வைத்திருக்கும் வல்லமையுள்ளதாம்.

வெந்தயத்தை தொடர்ந்து சாப்பிட்டு வரும் ஆண்களுக்கு செக்ஸ் உணர்வுகள் அதிகரிக்கிறதாம். இந்த ஆய்வுக்காக 25 வயது முதல் 52 வயது வரையிலான 60 ஆரோக்கியமான ஆண்களை ஆய்வுக்குட்படுத்தினர். அவர்களுக்கு ஒரு நாளைக்கு இரு முறை என மொத்தம் 6 வாரங்களுக்கு வெந்தயச்சாறு கொடுத்துப் பார்த்தனர்.

ஆய்வுக் காலத்தின்போது அவர்களது செக்ஸ் உணர்வுகள் கண்காணிக்கப்பட்டன. ஆறு வார காலத்திற்குப் பின்னர் அவர்களது செக்ஸ் உணர்வுகள் 16.1 என்பதிலிருந்து 20.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதேசமயம், வெந்தயம் சாப்பிடாமல் ஒரு குழுவினரை ஆய்வுக்குட்படுத்திப் பார்த்தபோது அவர்களுக்கு செக்ஸ் உணர்வுகள் மந்தமாக இருந்தது தெரியவந்தது.

வெந்தயச் செடியின் விதைகளில் சபோனின் எனப்படும் ஒரு கூட்டுப்பொருள் உள்ளது. அது ஆண்களின் செக்ஸ் ஓமோனான டெஸ்டோஸ்டீரானை தூண்டுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் படு சாதாரணமாக உபயோகப்படுத்தப்படும் வெந்தயத்திற்கு ஆண்களின் செக்ஸ் ஓமோனைத் தூண்டும் சக்தி அதிகம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு உண்மையிலேயே சந்தோசமான செய்திதான். படுக்கை அறையில் இனி முழுமையான உணர்வுகளுடன் சந்தோஷமாக இருக்க அவ்வப்போது இனி சமையலறைப் பக்கமும் போங்கள் ஆண்களே...!



# கால்களை கவனியுங்கள்

உடலைத் தாங்கி நிற்கும் கால்களை நாம் பெரும்பாலும் கண்டு கொள்வதில்லை. பல இடங்களுக்கும் பயணிக்கும் பாதங்களை பராமரிப்பதில்தான் நமது அழகும் ஆரோக்கியமும் இருக்கிறது. இளம் வயதில் பாதங்களை கவனிக்காவிட்டால் முதுமையில் முழங்கால்கள் காலை வாரிவிடும். வலியால் வாட்டி ஆளைச் சுருட்டிவிடும்.

அழகுபடுத்த மட்டுமல்லாமல் ஆரோக்கியத்திற்காகவும் பாதங்களை தினமும் சுத்தமாகப் பராமரிக்க வேண்டும். இதற்காக புட்பாத் முறை இருக்கிறது. அகலமான பாத்திரத்தில் வெதுவெதுப்பான நீரைப்பரப்பி பாதங்களைச் சில நிமிடங்கள் மூழ்க வைக்க வேண்டும். பிறகு காலை வெளியே எடுத்து சில நிமிடங்களுக்குப் பிறகு குளிர்ந்த தண்ணீரில் சில நிமிடங்கள் பாதங்களை வைத்திருக்க வேண்டும்.

பாதக்குளியல் [புட்பாத்] செய்வதால் கால்களுக்கு இரத்த ஓட்டம் சீராகப் பரவுகிறது. உடல் களைப்பு நீங்குகிறது. மாலை நேரத்தில் ரி.வி. பார்த்துக் கொண்டே கூட 'புட்பாத்' எடுக்கலாம். வெதுவெதுப்பான தண்ணீரில் சிறிது உப்பு சேர்த்துக் கொண்டால் இன்னும் புத்துணர்ச்சி கிடைக்கும். புட்பாத் முடித்ததும் துண்டால் பாதங்களைத் துடைத்து பவுடர் போட்டுக் கொள்ளலாம்.



'புட்பாத்' போல 'புட் மசாஜ்' செய்தும் கால்களைப் பராமரிக்கலாம். இரவில் தூங்கும் முன் 'புட் மசாஜ்' செய்யலாம். 'புட் கிரீம்' கொண்டு குதிக்கால் முதல் விரல் நுனிவரை மேல்நோக்கி மசாஜ் செய்யுங்கள். விரல்களை வட்டமாகச் சுழற்றி மசாஜ் செய்வது இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். தினமும் மசாஜ் செய்வதால் பாதங்கள் களைப்படையாமல் உங்களைச் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும்.

ஆரோக்கியமான பாதங்களுக்கு சில பயிற்சிகளைச் செய்யலாம். நாற்காலியில் அமர்ந்தபடி கணுக்கால்களை சிலமுறை ஒரு திசையிலும் பிறகு எதிர்த்திசையிலும் சுழற்றி பயிற்சி செய்யலாம். அதேபோல நேராக நின்று கொண்டு குதிக்காலைச் சேர்த்து வைத்து பாதங்களை 'வி' வடிவில் விரித்து சில நிமிடம் நின்று பயிற்சி செய்யலாம். இதனால் கணுக்கால், கெண்டைக்கால் திசு வலுப்பெறும்.

பாதங்களுக்கான இன்னொரு பயிற்சி இது. பாதங்களை இணையாக வைத்து நின்று கொண்டு பாதங்களை மேல் நோக்கி உயர்த்தி குதிக்கால் பலத்தில் நிற்க வேண்டும். சிலமுறை இப்படிச் செய்வதால் தசைகள் வலுப்பெறும். ஓய்வாக இருக்கும்போது பாதங்களை தலையணையில் தூக்கிவைத்து பாதங்களுக்கு ஓய்வு கொடுங்கள்.

ஷூ மற்றும் செருப்புகளால் கால்கள் பாதிக்கப்படலாம். எனவே, அவற்றைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை. ஷூ செருப்புகள் அடிப்பக்கம் அகலமானதாகவும் மேல்பக்கம் மெத்தென்று மிருதுவாகவும் இருக்க வேண்டும். பொருத்தமான அளவுள்ள காலணிகளையே தேர்வு செய்ய வேண்டும். குதிக்கால் உயரமான காலணிகளைத் தவிர்க்கலாம்.



கால் அலங்காரத்திற்காக நெயில்பொலிஷ் செய்யலாம். முதலில் நகங்களிலுள்ள பழைய நெயில் பொலிஷ் களை அகற்ற வேண்டும். வெதுவெதுப்பான நீரில் கால்களை மூழ்க வைத்துவிட்டு வறண்ட தோல்களை நீக்க வேண்டும். நக இடுக்கில் உள்ள அழுக்களையும் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு தண்ணீரை துடைத்துவிட்டு நகங்களை சீராக வெட்டி மீண்டும் 'நெயில் பொலிஷ்' போட்டுக் கொள்ள வேண்டும்.

கால்களில் பித்த வெடிப்பு, கால் ஆணி, சேற்றுப் புண் போன்ற பாதிப்புகள் ஏற்படக்கூடும். சேற்றுப்புண், செருப்புக்கடி, புண்களின் வழியே கிருமிகள் உடலுக்குள் புகுந்தால் பல வியாதிகள் உருவாகும். எனவே கால்களில் ஏற்படுகள் புண்கள், பாதிப்புகளுக்கு உடனே சரியான மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். நன்கு பராமரிக்கப்படும் தாமரை மலர்ப் பாதங்களுடன் தான் ஆரோக்கியமான வாழ்க்கைப் பயணம் சாத்தியம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 வருடங்களில் 2,25,000 பேரை கொலை செய்த அமெரிக்கா

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் உலக அளவில் பல்வேறு நாடுகளில் அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதல்களில் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் கொல்லப் பட்டுள்ளனர்.அமெரிக்கப் படைகள் இந்த வேட்டைக்காக செய்த செலவுத் தொகை மட்டும் 4.4 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்பது குறிப்பிடத்தக் கது.

அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழ கம் நடத்திய புள்ளிவிபர சேகரிப்பில் இது தெரியவந்துள்ளது.

2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் நகரில் பயங்கர வாதிகள் தாக்குதல் நடத்தினர்.இரட்டை கோபுரம் விமானம் மூலம் தகர்க்கப்பட் டது.இதைத் தொடர்ந்து அமெரிக்கா, உலகளாவிய தீவிரவாத வேட்டையைத் தொடங்கியது.ஆப்கானிஸ்தான்,ஈ ராக்,பாகிஸ்தான்,ஏமன் என பல நாடுக ளிலும் அமெரிக்கப் படைகள் வேட்டை யில் இறங்கின.

இதில் ஈராக்,ஆப்கானிஸ்தான் பெரு மளவில் உயிர்ச்சேதத்தை ஏற்படுத் தின.அமெரிக்கப் படைகள் இதுவரை நடத்திய தாக்குதல்களில் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக இந் தத் தகவல் தெரிவிக்கிறது.

அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் சிக்கி 3 இலட்சத்து 65 ஆயிரம் பேர் காய மடைந்ததாகவும் பல்கலைக்கழக தகவல் தெரிவிக்கிறது.

இதில் அமெரிக்கக் கூட்டுப் படைகளின் தரப்பில் மட்டும் 31 ஆயிரத்து 741 பேர் உயிரிழந்துள்ளனர்.இவர்கள் அனை வருமே இராணுவத்தினர் ஆவர்.இவர்க ளில் 6000 பேர் அமெரிக்கர்கள், 1200 பேர் கூட்டுப் படையினர், 9900 பேர் ஈராக்கியர்கள், 8800பேர் ஆப்கானிஸ்தா னியர்கள், 3500 பேர் பாகிஸ்தானியர் கள் இவர்கள் தவிர அமெரிக்காவுக்காக பாதுகாப்பு குறித்த தகவல்களைத் திரட் டித் தந்தவர்கள் 2300 பேர் கொல்லப்பட் டுள்ளனர்.

அப்பாவி மக்கள் தான் பெருமளவில் உயிரிழந்துள்ளனர்.இவர்களின் எண் ணிக்கை மட்டும் 1 இலட்சத்து 72 ஆயி ரம் பேர் ஆவர்.இவர்களில் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேர் ஈராக்கியர்கள்.35,000 பேர் பாகிஸ்தானியர்கள் 12,000 பேர் ஆப்கானிஸ்தானியர்கள் ஆவர்.

அமெரிக்க மற்றும் கூட்டுப்படையின ரிடம் சிக்கி உயிரிழந்த தீவிரவாதிகளின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. இருப்பினும் இது 20,000 முதல் 51,000 ஆக இருக்கலாம் என கருதப்படுகிறது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 168 பேர் செய்தியாளர்கள்,266 பேர் மனிதா பிமான பணியாளர்கள்.

அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் சிக்கி இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளோரின் எண்ணிக்கை மட்டும் 708 இலட்சம் பேர் ஆவர்.இவர் களில் பெரும்பாலானவர்கள் ஈராக் மற் றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

## குறட்டையை தடுக்கும் ஹோட்டல்

ஹோட்டலொன்று குறட்டை ஒலியிலிருந்து விடுபட்டு மெய்மறந்து தூங்குவதற்கு ஏற்ற வகையில் நவீன வசதி களுடன் கூடிய அறையொன்றை பரீட்சித்து வருகிறது.

கிறவுன் பிளாஸா எனும் இந்த ஹோட்டல் பல்வேறு தொழில்நுட்பங்களையும் உபாயங்க ளையும் இதற்காக பயன்படுத்துகிறது.



அந்த ஹோட்டலில் பரீட்சிக்கப்படும் குறித்த அறை ஒலி ஊடுருவாத தன்மையைக் கொண்ட சுவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. விசேட பஞ்சுகளால் அமைக்கப்பட்ட இந்த , சுவர்களால் குறட்டை ஒலி அறையை அதிரச் செய்யாமல் தடுக்கும்.

அதேவேளை, கட்டிலின் தலைப்பக்கமுள்ள பலகை குறட்டையினால் ஏற்படும் எதிரொலிக ளைத் தடுக்கும்.


குறட்டை தடுப்பு தலையணைகளும் கட் டிலில் உள்ளன. அத்துடன் பொதுவாக மல் லாக்காகப்படுத்து உறங்கும்போது குறட்டை ஏற்படுவதால் வாடிக்கையாளர்கள் பக்குவாட் டில் படுத்துறங்குமாறு கோரப்படுகின்றனர்.

இந்த ஹோட்டலின் லண்டன் கிளையிலும் ஐரோப்பாவிலும் மத்திய கிழ்க்கிலுமுள்ள ஏனைய 9 ஹோட்டல்களிலும் சோதனை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டலின் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பில் குறிப்பிடுகையில்; சகாவின் குறட்டைச் சத்தத்திலிருந்து அதிகாலை 3 மணிக்கு தலையணைக்கடியில் தலையைப் புதைத்துக் கொள்ளும் நிலை இனி இல்லை. இரவு முழுவதும் விழித்திருப்பதைப் போன்ற மோசமான நிலை வேறு இல்லை. அதனால்தான் நாம் இந்த சோதனைகளை மேற்கொண்டுள்ளோம்' எனத் தெரிவித் துள்ளார்.

விடுமுறைக் காலங்களில் உல்லாசமாக இருக்க வந்த 1000 பேரிடம் நடத்திய ஆய்வில் சுமார் அரைவாசிப் பேர் தங்களது துணை யின் குறட்டைச் சத்தத்தால் காலம் வீணாகிப் போனதாக குறைகூறியுள்ளமை தெரியவந் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால்...

நகர்ப்புறத்தில் கொஞ்சம் ஒதுக்குப்புறமான பகுதி அது.வசதி படைத்தவர்களின் வீடுகள் அதிகம். அவர்களெல்லாம் காலையில் கிளம்பிச் சென்றால் இரவில்தான் வீடு திரும்புவார்கள்.

அங்குள்ள வீடுகளுக்கு இடையில் உள்ள காலி இடங்களில் 14,15 வயதுள்ள சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பார்கள்.வசதி படைத்தவர்களின் வீட்டு சுவர்களைச் சுற்றித்தான் அவர்களின் விளையாட்டுகள் அரங்கேறும்.விளையாடிக்கொண்டிருக்கும்போது சில நேரங்களில் பந்து வீட்டுக்குள்ளே விழுந்துவிடும்.அதை எடுப்பதற்காக அவர்கள் தாண்டிக் குதித்து உள்ளே சென்றுவிடுவார்கள்.

இப்படி அவர்கள் சுவர் தாவிக் குதிப்பது பலருக்கும் தெரியும்.அவர்கள் பந்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிடுவார்கள்.எனவே யாரும் அவர்களை சந்தேகப்படுவதில்லை.ஆனால்,உண்மையில் நடப்பது வேறு.

பந்தை எடுக்கச் செல்வதுபோல் ஒருவர் பின் ஒருவராக நான்கைந்து பேர் வீட்டுக்குள் புகுந்து விடுவார்கள்.ஒருவன் பந்தை எடுத்துக்கொண்டு வர மற்றவர்கள் கையில் கிடைப்பதை எடுத்துக்கொண்டு வந்துவிடுவார்கள்.

இதெல்லாம் ஆரம்பத்தில் யாருக்கும் தெரியாது.ஒருமுறை வசதியான வீட்டில் உள்ள விண்டோ ஏ.சி.யை கழற்றிவிட்டு சிறுவர்கள் வீட்டுக்குள் புகுவதை சிலர் பார்த்திருக்கிறார்கள்.இதை கவனித்துவிட்ட சிறுவர்கள் தப்பி ஓடி இருக்கிறார்கள்.

உண்மையில் வீடு புகுந்து திருடுவதைத்தான் அந்த சிறுவர்கள் தொழிலாகவே வைத்திருக்கிறார்கள்.

வசதி படைத்தவர்களில் வீடுகளுக்கு இடையில் உள்ள காலி இடங்களில் விளையாடுவது போல சென்று நோட்டமிடுவது இவர்கள் திட்டத்தின் முதல் பகுதி.ஆட்கள் எப்போது வீட்டைவிட்டு வெளியே செல்கிறார்கள்.எப்போது திரும்புகிறார்கள் என்பதை நன்றாக கவனித்த பிறகு உள்ளே நுழைவது இவர்களின் வழக்கம்.

விண்டோ ஏ.சி.யை கழற்றிவிட்டு நுழைவது சிறுவர்களுக்கு எளிதானது.அதற்கான சிறு ரம்பங்களை விளையாட்டு பொருட்கள்போல தங்களுடனேயே வைத்திருக்கிறார்கள் இந்த சிறுவர்கள்.

இன்னொருமுறை அவர்கள் இது போல ஏ.சி.யை கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தபோது சிலர் அவர்களை பிடித்துவிட்டார்கள்.பிரச்சினையாகி விட்டது.சில பெரியவர்கள் வந்தார்கள்.சின்ன வயசுப் பையன்கள் ஏதோ செலவு செய்ய காசுக்கு ஆசைப்பட்டு திருடி இருப்பார்கள்.இவர்களை பொலிஸில் ஒப்படைச்சா எதிர்காலம் பாதிக்கும். எனவே,கண்டிச்சு விட்டிருவோம். அடுத்து இப்படி செய்தார்கள் என்றால் பார்த்துக்கலாம்?என்று பேசினார்கள்.அதுதான் பலருக்கும் சரியென்று பட்டது.பிடிபட்டவர்களுக்கு நிறைய அறிவுரை சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

இங்கு பிரச்சினைக்குரிய விடயம் சிறுவர்கள் திருடியதில்லை.இந்தச் சிறுவர்களை தயார்படுத்தியதே அந்த பெரியவர்கள் என்பதுதான் மறைந்திருக்கும் ஆபத்தான உண்மை.அவர்களுக்கு 30 வயதுக்கு மேலிருக்கும்.அதே பகுதியில்தான் வசிக்கிறார்கள்.

வீட்டில் கஷ்டப்படும் சிறுவர்கள் சிகரெட்,மதுப்பழக்கம் உள்ள சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிப்பது இந்த பெரியவர்களின் வேலை.இதுபோன்ற சிறுவர்களை சினிமாவுக்கு அழைத்துச் சென்றும் சிகரெட்,மது போன்ற தேவைகளுக்கு பணம் கொடுத்தும் தங்களின் வலையில் சிக்க வைக்கிறார்கள்.

ஆள் நடமாட்டம் இல்லாத வீடுகளை நோட்டமிடச் சொல்வதும் வீட்டுக்குள் நுழையும் தருணத்தைச் சொல்வதும் ஆட்கள் வருகிறார்களா? என்பதை தூரத்தில் இருந்து கவனிப்பதும் இந்த பெரியவர்கள்தான்.ஒரு வேளை சிறியவர்கள் பிரச்சினையில் சிக்கிக் கொண்டால் அங்கு சென்று பெரிய மனிதர்கள்போல் சமாதானம் பேசுவதும் இவர்கள் தான்.

இப்படி மறைமுகமாகத் திருடிக் கிடைக்கும் பொருட்களை சிறியவர்கள்,பெரியவர்கள் அனைவரும் பங்கிட்டுக் கொள்கிறார்கள்.இப்படிப்பட்ட திருட்டுக்கூட்டம் உங்கள் அருகாமையிலும் இருக்கலாம்.உங்கள் வீடுகளை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

## எலக்ரோனிக் சிகரெட்



புகை பிடிப்பவர்கள், புகையை சுவாசிப்பவர்களை நோயில் இருந்து காப்பாற்றும் வகையில் இ- சிகரெட் விற்பனைக்கு வந்துள்ளது. குர்கானை சேர்ந்த நிறுவனம் அறிமுகம் செய்துள்ள ஜோய் 510 என்ற அதன் விலை 4000 ரூபா.

கடந்த ஆண்டில் வெளியான ஹாலிவூட் படம் தடூரிஸ்ட். ஜோன் டெப் அதில் நாயகன் ஏஞ்சலினா ஜூலி நாயகி. ரயிலில் எதிரெதிரே அமர்ந்து பயணம் செய்யும் காட்சி அதில் சிகரெட்டை இழுத்து புகை விட்டுக் கொண்டே இருப்பார் டெப். முகத்தில் புகை படர்ந்தாலும் அமைதி காப்பார் ஏஞ்சலினா.

நான் புகை பிடிப்பது உன்னை பாதிக்கவில்லையா... என்று கேட்கும் டெப், இது எலக்ரோனிக் சிகரெட் பாதிக்காது என்பார். ஏஞ்சலினா் ஆச்சரியமாக பார்க்க, "நம்பவில்லையா..." என்றபடி அதன் தீ நாக்கை கையில் தேய்த்தபடி... இது எல்.இ.டி. லைட் என்று கூறுவார். ஆம் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஆண்டே விற்பனை தொடங்கி விட்ட இ- சிகரெட், இந்தியாவில் இப்போது அறிமுகமாகி உள்ளது. குர்கானை சேர்ந்த இணைய தள நிறுவனமான விண்ட்பைட்டொட். இன் இதை சீனாவில் இருந்து இறக்குமதி செய்து ஜோய் 510 என்ற பெயரில் விற்பனைக்கு கொண்டு வந்துள்ளது.

பவுண்டன் பேனா வடிவில் இருக்கும் அதில், அழுத்தி இங்க் நிரப்ப இருக்கும் பகுதியும் உண்டு. பேனாவில் இங்க், இ-சிகரெட்டில் நிகோடின் திரவம். ஆம் இந்த நிகோடின்தான் சிகரெட் பிடிப்பவர்களை திருப்திப்படுத்துகிறது. திரவத்தை சூடாக்க பேட்டரி, முனையில் எல்.ஈ.டி. விளக்கு. ஜோய் 510 சிகரெட்டின் ஒரு விசையை அழுத்தினால் பேட்டரி இயங்கி திரவம் சூடாகி புகை வரும் சிகரெட் முனையில் தீ நாக்கு போலவே விளக்கு எரியும்.

பிறகு வாயில் வைத்து இழுத்து வட்ட வட்டமாக புகை விடலாம். அந்த புகையால் யாருக்கும் பகையில்லை. இந்த இ-சிகரெட் சிலமுறை பயன்படுத்தி தூக்கி எறிவது ரூபா 900. நீண்ட காலம் ரீச்சார்ஜ் செய்து பயன்படுத்துவது ரூபா 4000 என 2 விலையில் கிடைக்கிறது. சிகரெட் பழக்கத்தை விட் முடியாதவர்கள் இதற்கு மாறலாம். புற்றுநோயின் ஆபத்து இல்லை. விரைவில் இது இலங்கையிலும் அறிமுகமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடி – அச்சு – செம்மொழி

**கா.அய்யப்பன்**

## இலக்கிய சுவை...

தமிழ்மொழி- 'செம்மொழி' அறிவிப்புக்குப் பிறகு தமிழ் இலக்கிய, இலக்கணக் குறிப்பாக இலக்கிய மோகம் அதிகரித்திருப்பது ஆரோக்கியமானது.செம்மொழிப் பட்டியலில் இடம்பெறும் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் மீதான ஆய்வை முன்னெடுக்க மேற்கொள்ளப் பட்ட திட்டங்கள் வரவேற்க வேண்டிய ஒன்று என்றாலும் அது நுணுக்கமான அரசியல் பின்புலம் கொண்டது.அப்படியான செம்மொழிப் பட்டியலிலும் தமிழர் வரலாற்றுத் தரவிலும் முதலில் நிற்பது சங்க இலக்கியங்களான பாட்டும் தொகையும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்கிற தொகுப்பில் இடம்பெறும் நூலைச் செம்பதிப்பு செய்யல், வாசித்தல் என்பது அதன் புத்தகமாக்க வரலாற்றோடு பொருந்திப் பார்க்க வேண்டிய தேவை நமக்கிருக்கிறது.

தமிழ்ச் சூழலில் ஓலைவழியாக வாழ்ந்து வந்த இலக்கண, இலக்கியங்கள் புத்தகமாக அச்சிடல் மிக முக்கிய நிகழ்வாகும்.அப்படியான அச்சு முறையின் ஊடாக சங்க இலக்கியத்தை நாம் புரிந்து கொள்வதென்பது முக்கியமான ஒன்று. இதுவரை சங்க இலக்கியப் பதிப்பு குறித்து விபரங்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை தொடங்கி பலராலும் செய்யப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் சங்க இலக்கிய நூல்களின் முதல் பதிப்பையாவது சரியாக சொல்கிறதா எனில் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது.தமிழ் நூல் அச்சு வரலாற்றில் சங்கப்பிரதி பதிப்பு என்பது ஆதிக்க வர்க்கத்தின் சிந்தனையோடு இணைந்தது.

இறையனார் களவியல் உரையில் வரும் சங்கம் பற்றிய கதை தொடங்கிய அதன் பதிப்பு நிறைவுபெறும் வரை நிகழ்ந்த நிகழ்வுகள் சுவாரஸ்யமானவை. இறையனார் களவியல் உரையில் எட்டுத்தொகை நூல்களுள் சிலவற்றில் இருந்து மட்டுமே மேற்கோள் காட்டப்படுகின்றன. பன்னிரு பாட்டில் தான் பத்துப்பாட்டு என்கிற பெயர் வருகிறது.இவை முறையே கி.பி.8,12 என்கிற கால வரையறைக்குள் சொல்லப்படுபவை.இதற்கடுத்த காலகட்டத்தில் வைதிக சமயத்தவரான பேராசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய இவர்களால் பாட்டும் தொகையும் என வரையறை தரப்படுகின்றன.இதே சிந்தனை சங்க இலக்கியப் பதிப்பிலும் செயற்பட்டது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றே அவை புத்தகமாக அறியப்பட்டன.வையாபுரிப்பிள்ளையே 1940 களில் சங்க இலக்கியம் எனப் பெயரிட்டுப் பதிப்பித்தார்.

சங்கப் பிரதியான பாட்டும் தொகையுமாகிய இவற்றில் 'திருமுருகாற்றுப்படை' மட்டுமே முதலில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சங்க இலக்கியப் புரிதலோடோ பத்துப்பாட்டில் ஒன்று என்கிற புரிதலோடோ, பதினோராம் திருமுறையில் ஒன்று என்கிறப் புரிதலோடோ பதிப்பிக்கப்படவில்லை.மாறாக முருகன் பாடல் என்கிற புரிதலோடே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

'திருமுருகாற்றுப்படை மூலபாடம்,தெய்வத்தன்மைப் பொருந்திய மதுரைக் கடைச் சங்கத்து மகாவித்துவானாகிய நக்கீரர் அருளிச் செய்தது. நச்சினார்க்கினியர் உரைபடியே பரிசோதித்துச் சென்னைப் பட்டணம், விவேகக் கல்விச் சாலைத் தமிழ் தலைமைப் புலவராகிய சரவணப் பெருமாளையரால் கல்வி விளக்கச்சுக்கூடத்தின் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. சய வருடம் ஆவணி மாதம் (1934 ஆகஸ்ட் செப்டம்பர்) பதிப்பிக்கப்பட்டது என்கிற தகவலுடன் அச்சாகியுள்ளது.திருமுருகாற்றுப்படை, 1851 இல் ஆறுமுகநாவலராலும் 1853 இல் சுப்பராயராலும் நச்சினார்க்கினியர் உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. சி.வை.தாமோதரம் பிள்ளையின் கலித்தொகைப் பதிப்பான 1887 க்குள் பல பதிப்புகளைத் திருமுருகாற்றுப்படை கண்டது.

தமிழ் இலக்கிய, இலக்கண மரபில் சமயங்களின் அதிகாரங்கள் மிக்குக் கிடப்பது வெளிப்படை. புத்தகமாக்கம் என்பது வைதிக (ஆதிக்க) சமயம் சார் சமூகத்தாரால் மட்டுமே சாத்தியமானது. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சாகத் தொடங்கிய தமிழ் நூல்களின் பதிப்பு அரசியல் ஆதிக்கவர்க்கத்தின் அதிகார மையங்களுக்குக் கட்டுப்பட்டே இயங்கியது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் பக்தி இலக்கியங்கள், இலக்கணங்கள்,தத்துவங்கள் எனப் பல நூல்கள் அச்சாயின. ஆனால், தமிழின் பழைமையான இலக்கியங்களாகக் கொள்ளப்படும் சங்க இலக்கியம் மட்டும் தாமதமாகப் பதிப்பிக்கப்பட்டது ஏன்? என்கிற வினா பல்வேறு சிந்தனை மரபுக்கு உட்பட்டது.

'சங்க நூல்களெல்லாம் புத்த சமண சமயச் சார்புடையன. அவைகளைப் பயிலுதல் கூடாது என்று எனது இளமைப் பருவத்தில் சில சிவனடியார்கள் கூறியதுண்டு' என்று ம.பாலசுப்பிரமணியன் வையாபுரிப்பிள்ளையின் 'பாட்டும் தொகையும்' என்கிற சங்க இலக்கிய மூலப் பதிப்பில் பதிவு செய்துள்ள பின்புலத்தோடு சங்க இலக்கியப் பதிப்பின் தாமதத்தைப் புரிந்து கொள்வது நன்று.

பக்திப் பனுவல் என்ற நிலையில் திருமுருகாற்றுப்படைக்கான பல பதிப்பின் தேவையும் பிற சங்க இலக்கியங்கள் பதிப்பின் கால இடைவெளியும் இவற்றூடாக செயற்பட்ட சைவ-வைணவ சமய அறிவுசார் தளத்தில் இயக்கங்கொண்ட 19 ஆம் நூற்றாண்டு அறிவுப் பாரம்பரியத்தின் செயற்பாட்டையும் அவதானிக்க முடியும்.பத்துப்பாட்டு (1889), புறநானூறு (1894), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப் பத்து(1904), நற்றிணை (1915), குறுந்தொகை(1915), பரிபாடல் (1918), அகநானூறு (1920) என்று அறியவரும் சங்க இலக்கியப் பதிப்பும் 1834 முதல் 1887 வரை வெளியான திருமுருகாற்றுப்படையின் பதிப்பும் செம்மொழி அறிவிப்பினூடாக நிகழும் ஆய்வின் வழி இன்னும் நாம் புரிந்துகொள்ள வேண்டியவை அதிகம் இருக்கின்றன.

1914 இல் முழுமைபெற்ற நற்றிணைப் பதிப்பு பின்னத்தூர் நாராயணசாமி அய்யரின் இறப்புக்குப் பிறகு 1915 இல் தான் நமக்குக் கிடைக்கிறது.1887 க்கும் 1920 க்கும் இடைப்பட்ட 33 ஆண்டு இடைவெளி ஏன்? சங்க இலக்கியச் சுவடி கிடைக்காமல் இல்லை.சங்க இலக்கிய ஏட்டுச் சுவடிகள் ஓலையாகவும் காகிதப் பிரதியாகவும் பல இருந்திருக்கின்றன என்பது 1920 வரை வெளியான சங்க இலக்கியங்களின் பதிப்பின் முன்னுரையினை நன்கு கவனித்தால் அறியவரும்.

'ஏடுகள் பற்றிய செய்திகளையும் அவ்வேடுகளை அவர்கள் பெற்றுக் கொண்ட முறைகளையும் நோக்கும் போது அரசியல், சமூக செல்வாக்குகள் முதன் நிலைப்படுகின்றமையைக் காணலாம்.ம டங்களில் பெறப்பட்ட ஏடுகளின் மீட்பினை நோக்கும்போது அவ்வேடுகள் ஒரு தொடர்ச்சியான பயில்வுப் பாரம்பரியத்தைச் சார்ந்தவையாவல்லாது சிதைவுற்றுப்போன ஒரு பாரம்பரியத்தின் வழியாகவே பதிப்பாசிரியர்களுக்குப் பெரும்பாலும் கிட்டியுள்ளன எனும் உண்மை முக்கியமானதாகும்' என்கிற கா.சிவத்தம்பியின் உ.வே.சா.வின் பதிப்புப்பணி பற்றிய சிந்தனையோடு அணுகத்தக்கது.

சங்க இலக்கியங்கள் என்று நாம் போற்றும் பாடல்கள் பல்வேறு அதிகாரப் பின்புலத்தோடு காப்பாற்றப்பட்டிருக்கின்றன. முக்கியமான இறையனார் களவியல் உரை முதலான சைவ நூல்களில் மேற்கோள் காட்டப்பட்டதுதான் இன்று நம் கையில் சங்க இலக்கியங்கள் புத்தகமாகக் கிடைத்துள்ளதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறண்ட மேகங்கள்

சூரியனில் இருந்து வெளிவரும் வெப்பமானது தண்ணீரைச் சூடாக்குகிறது. தன்னால் முடிந்தளவுக்கு வெப்பத்தை உள்வாங்கும் தண்ணீர்,மீதி வெப்பத்தை திருப்பியனுப்புகிறது. அது தான் நீராவியாக மேலே செல்கிறது. அவ்வாறு மேலே செல்லும்போது நீராவி குளிர்ந்து காற்றில் கலந்திருக்கும் தூசுத்துகள்களில் பட்டு அடர்த்தியாகிறது. அதாவது நீர்த்துளிகளாக மாறுகிறது. இந்தத் துளிகள் கனமாகவும் பெரிதாகவும் மாறும்போது மழையாகப் பூமியில் விழுகிறது. தற்போது வாகனங்கள்,தொழிற்சாலைகள் போன்றவை ஏராளமாகப் பல்கிப் பெருகிவிட்டன. இதனால் வளிமண்டலத்தில் புகையின் அளவு அதிகரித்துவிட்டது.இந்தப் புகையால் காற்றிலுள்ள தூசுத்துகள்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இவ்வாறு தூசுத்துகள்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் மழைத்துளிகள் பெரிதாக வாய்ப்பில்லை. எனவே, சிறு சிறு துகள்களாக மழைத்துளிகள் மாறிவிடும். இப்படி சிறுசிறு துளிகள் அடங்கிய மேகத்தை வறண்ட மேகம் என்று அழைக்கின்றனர். இதில் மழையே இருக்காது. தூய்மையான மழை மேகத்தையும் வறண்ட மேகத்தையும் இஸ்ரேல் விஞ்ஞானிகள் படம் பிடித்துள்ளனர். தூய்மையான மழை மேகங்களில் இருப்பதில் பாதி அளவு மழைத்துளிகளே வறண்ட மேகத்தில் இருப்பது தெரியவந்தது. எனவே, மழை வேண்டுமென்றால் சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என எச்சரிக்கிறார்கள் விஞ்ஞானிகள். வாகனங்களும் தொழிற்சாலைகளும் வெளிவிடும் புகையைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏராளமான மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். இதையெல்லாம் செய்யாவிட்டால் பிற்காலத்தில் மேகம் கூடும். ஆனால், மழை பெய்யாது.




## ஆமை



* ஆமைக்குப் பற்கள் கிடையாது.
* வரலாற்று காலத்துக்கு முந்தைய ஆமைகள் சுமார் 5 ஆயிரம் இறாத்தல் எடை கொண்டவையாக இருந்தன.
* கடல் ஆமைகள் குஞ்சு பொரிக்கும்போது ஆயிரம் குஞ்சுகளில் ஒன்றுதான் உயிர்தப்பும்.
* கடல் ஆமைகள் நிறைய உப்பை உட்கொள்ளும். அதிகப்படியான உப்பை அவை கண்கள் வழியாக வெளிப்படுத்தும். எனவே, அவை எப்போதுமே அழுவது போலத் தோன்றும்.

# குறுக்கெழுத்துப்போட்டி - 91

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ■ | 11 |
| 12 | 13 | 14 | 15 | ■ | 16 |
| 17 | 18 | ■ | 19 | 20 | 21 |
| 22 | ■ | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | ■ | 30 | 31 |

**இடமிருந்து வலம்**

1. அரச ஊழியர்களில் இதனை விரும்புபவர்களும் உண்டு, வெறுப்பவர்களும் உண்டு (குழம்பியுள்ளது)

7. தண்டனையில் ஒரு வகை (குழம்பியுள்ளது)

12. தோள், புயம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது)

17. மூச்சை அடக்குவதை இப்படிச் சொல்வர்

19. முதலாவது திருக்குறளில் வரும் ஆரம்பச் சொல் (குழம்பியுள்ளது)

23. துருசு (குழம்பியுள்ளது)

27. கீர்த்தி, பெருமை (திரும்பியுள்ளது)

30. சூழ்ச்சி (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. முத்தமிழில் ஒன்று

2. பனையோலைப் பெட்டியை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)

3. வஞ்சகம், மர்மம்

4. மாதுளைச் செடியை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)

6. மூளைக்கு வேலை கொடுக்கும் ஒரு வகை, உள்ளக விளையாட்டு (தலைகீழ்)

20. ஒரு வகை மரம்

23. காதல் தேசம் படத்தின் நாயகி

## குறுக்கெழுத்துப்போட்டி - 89 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஒருமைப்பாடு | 1. ஒன்றன் பால் |
| 7. கரியன் | 2. கருவி |
| 12. விறல் | 3. மையல் |
| 15. குட | 4. பாரி |
| 18. ஜாலம் | 6. குடும்பி |
| 21. பாலைவனம் | 15. படலம் |
| 26. பங்கிடுதல் | 18. ஜானகி |
| | 22. தலை |
| | 23. வடு |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ஏ.எஸ்.அகஸ்ரின்,**
**இல. 7, 4ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

## பாராட்டுப் பெறுவோர்

01. பி.எம்.கலாமுத்தீன்,
எயார்டெல் நிறுவனம்,
கோப்சிற்றி கட்டிடம்,
பிரதான வீதி, மருதமுனை.

02. ஹரினி முரளிதரன்,
இல. 125/1 B, தாழ்வுபாடு வீதி,
எழுத்தூர், மன்னார்.

03. என்.கிருஷாயினி,
மஸ்கெலியா.

04. எஸ்.ஜீவிதா,
இல. 24, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.

05. ரஜினி ராஜசேகர்,
சாவகச்சேரி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, ஏலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

# தற்காத்துக்கொள்ளும் தாவரங்கள்



தங்களைத் தாக்க [சாப்பிட] வரும் உயிரினங்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள அவற்றைத் திருப்பியடிக்கவோ, சண்டையிடவோ தா்வரங்களால் முடியாது. மனிதனைப் போல ஆயுதங்களைப் பயன்படுத்தும் வித்தையும் தாவரங்களுக்குத் தெரிவதில்லை. இருந்தாலும் தங்களைத் தற்காத்துக்கொள்ள ஒரு விதமான விசேட அமைப்புகளை சில தாவரங்கள் பெற்றுள்ளன. ஜப்பானைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர். லிமா பீன் என்ற தாவரம் தன்னைத் தின்பதற்கு அபாயகரமான பூச்சிகள் வந்தால் உடனே ஒருவிதமான இரசாயனத்தை வெளியிடுகிறது. இந்த இரசாயனத்தின் வாசனை பிடிக்காமல் பூச்சிகள் அங்கிருந்து பறந்து விடுகின்றன. இந்தத் தாவரம் மட்டுமல்ல, உலகம் முழுவதுமுள்ள பல தாவரங்கள் தங்களுக்கென சில தனித்துவமான பண்புகளைப் பெற்றிருக்கின்றன. இவை வெளியிடும் இரசாயன வாசனையும் காரமும் எதிரிகளை விரட்டி விடுகின்றன. சில தாவரங்கள் வெளியிடும் இரசாயனம் தன்னைத் தின்ன வரும் பூச்சிகளையோ அல்லது விலங்குகளையோ கொன்றுவிடும் ஆற்றல் பெற்றவையாகவுள்ளன. 'கலபாகஸ்' தீவில் உள்ள ஒரு வகையான தாவரம் இரண்டு மீற்றர் உயரம் வரை வளரும். இந்தத் தாவரங்களின் இலைகளைத் தின்பதற்கு அந்தத் தீவிலுள்ள ஆமைகள் விரும்பும். ஆனால், ஆமைகள் வந்தாலே இந்தத் தா்வரம் தன்னுடைய இலைகளைக் கடினமாக்கிக் கொள்ளும். ஆமைகள் அதைத் தின்ன முடியாமல் ஏமாந்து விடும். ஜப்பானில் உள்ள அஸலியாஸ் என்ற தாவரம் வெளிவிடும் இரசாயனத்தால் மான்கள் கூட அந்தத் தாவரத்தைத் தின்னாமல் திரும்பிவிடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியுடன் ஒரு கற்பனை பேட்டி

கருணாநிதியின் திரைப்படங்கள்,அறிக்கைகள் என்பவற்றைப் பார்த்து பழகியவர்களால் மட்டுமே இந்தப் பேட்டியை அனுபவிக்க முடியும் என நம்புகிறேன்.எனவே இது எனது கற்பனையில் உருவான பேட்டி.நான் கருணாநிதியை பேட்டி காண்கிறேன்.

**நான்: கனிமொழியை ஸ்பெக்ரம் வழக்கில் கைது செய்து உள்ளனர்.இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**கருணா:** (கேள்வி முடியும் முன்பே உணர்ச்சி வசப்பட்டு மறிக்கிறார்)என் கண்மணி நீ என் உடன்பிறப்பு,நான் உன் உடன்பிறப்பு,நீ எனது ஆசைத்தம்பி.நான் உன் பாசமுள்ள அண்ணன்.கனிமொழி எனது மகள்...நீ எனது தம்பி...(திரும்ப திரும்ப பேசுற நீ. திரும்ப திரும்ப பேசுற நீ)



எனக்கு தம்பியான உனக்கு கனிமொழி மகள் முறையானவள் அல்லவா,அவளை சட்டம் சந்தேகிக்கலாம் நீ சந்தேகிக்கலாமா? நீ சந்தேகித்தால் அதனை கம்பன் மன்னிப்பானா?அய்யன் வள்ளுவன் மன்னிப்பானா?இளங்கோ வடிகள் மன்னிப்பானா?ஐயகோ என்ன கொடுமை,என்ன கொடுமை,இந்த கொடுமைகளை காணச் சகிக்காமல் தான் சூரியன் கடலுக்குள் விழுகின்றானா?

இப்படி தான் ஒரு பெண்ணை மனிதர் குல மாணிக்கத்தை பெண்கள் குல திலகத்தை கண்ணகி எனும் காவியத்தை வரலாறு சந்தேகித்ததே,அதைவிடவா இது மோசம்.சொல்லடா என் கண்மணி,என் பொன்மணி,கண்ணகியின் சாபத்தால் மதுரையே பற்றி எரிந்தது உனக்குத் தெரியும்.பொறுத்திருந்து பாரடா என் கண்மணி.கனிமொழியின் சாபத்தால் திகார் சிறையே பற்றி எரியப் போகிறது.

**நான்: (தண்ணியை குடி...தண்ணியை குடி)அப்ப தலைவரே கைது செய்த சி.பி.ஐ.காரன் முட்டாள் என்கிறீர்களா?**

**கருணா:** முட்டாள் என்று சொல்லவில்லையடா என் கண்மணி முட்டாளாக இருக்கலாம் என்கிறேனடா என் ஆசை உடன்பிறப்பே (இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?)

**நான்: அப்ப தலைவர் சி.பி.ஐ.யே வேண்டாம் என்கிறீர்களா?**

**கருணா:** சி.பி.ஐ.வேண்டாம் என சொல்லவில்லை.சி.பி.ஐ.கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக் கூடாது என்பதால் சொல்கிறேன்.

**நான்: அதுசரி காங்கிரஸ் கூட்டணி பற்றி தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் தி.மு.க.தலைவர் கருணாநிதி முடிவெடுக்க வேண்டும் என வீரமணி கூறியுள்ளது பற்றி?**

**கருணா:** வைச்சு கிட்டாடா நான் வஞ்சகம் பண்ணுறேன்.

**நான்: கனிமொழி கைதில் சோனியா காந்தி...(கேள்வி கேட்கும்போதே இடைமறிக்கிறார்)**

**கருணா:** சோனியா சோனியா என்றால் உதடுகள் கூட ஒட்டாதடா,கனிமொழி,கனிமொழி என்றால்தான் உதடுகள் கூட ஒட்டுமடா என் கண்மணி,என் பொன்மணி,என் போண்டாமணி(நான் என்று சொன்னால் உதடுகள் கூட ஒட்டாது.நாம் என்று சொன்னால்தான் உதடுகள் கூட ஒட்டும்-கருணாநிதியின் இந்த சிந்தனைத் துளியை தமிழகத்தில் உள்ள பெரும்பாலான பஸ்களில் காணலாம்.

**நான்: ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க.வின் நிலைப்பாடு தான் என்ன?**

**கருணா:** ஈழத்தமிழர்களிற்கு தனி தமிழீழம் அமைத்துக் கொடுக்க தி.மு.க.என்றும் போல எல்லா வகையிலும் உடன் நிற்கும் (சிரிக்காமல் சீரியசாக ...பண்ணுகிறார்).

**நான்: நீங்கள் ஈழத்தமிழர் பிரச்சினையின் போது அவர்களுக்கு ஆதரவாக எதுவும் செய்யவில்லை என பரவலான குற்றச்சாட்டு ஒன்று உள்ளதே... அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**கருணா:** ஐயகோ இதைக்கேட்கும் போது என் நெஞ்சு கொதிக்கிறதடா என் கண்மணி,நான் ஈழத்தமிழர்களுக்காக மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தியதை என் கண்மணி நீ அறியாவிட்டாலும் இந்த வரலாறு அறியுமடா என் பொன்மணி...

பொக்கிஷம் படத்தில் பத்மப்பிரியாவுக்கு சேரன் எழுதிய கடிதங்களைவிட மன்மோகன் சிங்குக்கும் சோனியாவுக்கும் ஈழத் தமிழர் போராட்டத்தை ஆதரித்து அங்கு நடக்கும் இனப்படுகொலையை எதிர்த்து நான் எழுதிய கடிதங்கள் வரலாறு அறியுமடா.

இதையெல்லாம் தாண்டி என் உயிரைக் கூடத் துச்சமென மதித்து மூன்று மணிநேரம் நான் இருந்த சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை நீ மறக்கலாமாடா?இப்போது கூடச் சொல்லுகிறேன், ஈழத்தமிழர்களுக்காக அந்த மூன்று மணிநேர உண்ணாவிரதத்தில் நான் இறந்து போகவில்லை என்பது தான் இன்றும் என் நெஞ்சில் தைத்துக்கொண்டிருக்கின்ற ஒரே முள்...நான் உள்ளுக்குள் ஊமையாக அழுவது உனக்குத் தெரியுமடா என் கண்மணி.

**நான்: விஜயகாந்திற்கு மாற்றாக வடிவேலை நினைத்த உங்களின் அரசியல் சாணக்கியத்தைப் பற்றி?**

**கருணா:** கூடா நட்பு கேடில் முடியும்.

**நான்: உடன்பிறப்புகளிற்கு தாங்கள் சொல்ல விரும்புவது?**

**கருணா:** தமிழகத்தில் பெரும்பான்மை போனால் என்னடா என் கண்மணி திகாரில் (சிறையில்)நாங்கள் தானடா பெரும்பான்மை மனதைத் தளரவிடாதே என் ஆசை உடன் பிறப்பே திகாரில் ஆட்சி அமைப்போம்.

**நான்: இறுதியாக தங்களிடம் தேர்தல் முடிவுகளால் மூக்கு உடைபட்டு தாங்கள் முதலமைச்சர் பதவியில் இருந்து தூக்கி அடிக்கப்பட்டதை பற்றி?**

**கருணா:** மக்கள் எனக்கு சிறந்த ஓய்வை தந்துள்ளனர் எனக் கூறிய தமிழின் தலைவர் கருணா திடீரென எவ்வளவு நேரம் தான் நானும் வலிக்காதவன் மாதிரியே நடிக்கிறது என கூறியவாறு மஞ்சள் துண்டை வாய்க்குள் வைத்தவாறு விக்கி விக்கி அழ ஆரம்பிக்கிறார்.

(குறிப்பு-கருணாநிதியின் மனதைத் தவிர வேறு யார் மனதையும் புண்படுத்த அல்ல யாவும் கலப்படமற்ற கற்பனை)

aruliniyan001@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலனை மணக்கிறார் ஜெனிலியா



ஒரு வழியாக ஜெனிலியா ரிதேஷ் தேஷ்முக் காதலுக்கு இருதரப்பு பெற்றோரும் சம்மதம் சொல்லிவிட்டனர். எனவே கைவசம் உள்ள படங்களை முடித்துவிட்டு காதலரை கைபிடிக்கிறார் ஜெனிலியா. போய்ஸ் படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் ஜெனிலியா. சச்சின், சந்தோஷ் சுப்பிரமணியம், உத்தமபுத்திரன் போன்ற படங்களில் நடித்துள்ளார். தற்போது வேலாயுதம் படத்தில் விஜயுடன் நடிக்கிறார். தெலுங்கிலும் இந்தியிலும் முன்னணி நடிகையாக உள்ளார். ஜெனிலியாவும் இந்தி நடிகர் ரிதேஷ் தேஷ்முக்கும் சில வருடங்களுக்கு முன்னர் ஒரு படத்தில் ஜோடியாக நடித்தனர். அப்போது இருவருக்கும் காதல் மலர்ந்தது. ரிதேஷ் தேஷ்முக் முன்னாள் மராட்டிய முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக்கின் மகன். ஜெனிலியா ரிதேஷ் காதலுக்கு ஆரம்பத்தில் இரு வீட்டிலும் எதிர்ப்பு இருந்தது. குறிப்பாக தேஷ்முக்கின் தந்தை காதலர்களை பிரிக்க கடும் முயற்சி செய்தார். ஆனாலும் அவர்கள் காதலில் உறுதியாக இருந்தனர். ரகசியமாக சந்தித்து வந்தார்கள். எனவே எதிர்ப்பைக் கைவிட்டு சேர்த்து வைக்க முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதன் விளைவு இத்தனை நாட்கள் ரகசியமாக சந்தித்து வந்த காதலர்கள் இப்போது பெற்றோர் அனுமதியுடன் பகிரங்கமாக ஜோடியாக சுற்றுகின்றனர். சமீபத்தில் கனடாவில் நடந்த ஐஃபா விழாவில் ரிதேஷும் ஜெனிலியாவும் நெருக்கமாக உட்கார்ந்து இருந்த போது ஜெனிலியாவின் தாயாரும் உடனிருந்தார். கைவசமுள்ள படங்களை ஜெனிலியா முடித்துக் கொடுத்ததும் திருமணம் நடக்கும் என்று தெரிகிறது.

# ஜனநாதன் படத்தில் ஜெயம் ரவி – ஜீவா



எஸ்.பி.ஜனநாதன் இயக்கும் அடுத்த படத்தில் நடிகர்கள் ஜெயம் ரவியும் ஜீவாவும் இணைந்து நடிக்கிறார்கள். தமிழ், தெலுங்கில் தயாராகும் இந்த அதிரடிப் படத்துக்கு இன்னமும் பெயர் வைக்கப்படவில்லை. இந்தப் படம் குறித்து இயக்குநர் ஜனநாதன் கூறுகையில்; ஈ படம் முடிந்ததும் இன்னொரு படம் இருவரும் சேர்ந்து பண்ணலாம் என்று ஜீவாவும் நானும் திட்டமிட்டோம். அதே போல பேராண்மை முடிந்ததும் ஜெயம் ரவியோடு இன்னொரு படம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டோம். இப்போது தான் அதற்கான காலம் கனிந்திருக்கிறது. ஒரே படத்தில் இரண்டு பேரையும் இணைத்து இயக்கும் திட்டம் கைகூடியிருக்கிறது. ஜெயம் ரவியும் ஜீவாவும் இணையும் முதல் படம் இது. முழுக்க முழுக்க அதிரடி சண்டைப் படமாக இருக்கும். கதையின் களம் தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருப்பதால் இங்கேயும் வெளிநாட்டிலும் படப்பிடிப்பு நடைபெற இருக்கிறது. கதாநாயகியின் கதாபாத்திரம் கவர்ச்சியும் சண்டையும் கலந்து அமைந்திருக்கிறது. இதற்காக தமிழ் பேசத் தெரிந்த எந்த மாநில நடிகையாக இருந்தாலும் பொருத்தமாக தேர்ந்தெடுக்க இருக்கிறோம். ஏற்கனவே ஜீவா நடித்த ஈ, கோ ஆகிய படங்கள் தெலுங்கில் டப் செய்யப்பட்டு பெரும் வெற்றி பெற்றுள்ளது. பேராண்மை படமும் தெலுங்கில் டப் செய்யப்பட்டு விரைவில் வெளிவர இருக்கிறது. எனவே ஜெயம் ரவியும் ஜீவாவும் இணைந்து நடிக்கும் படம் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளில் மிகப்பெரிய பட்ஜெட்டில் தயாராகும் என்றார்.

## Saturday சினிமா

# சாய்பாபாவாக பிரகாஷ்ராஜ்



புட்டபர்த்தி சாய்பாபாவின் மகிமை மற்றும் சர்ச்சைகளை உள்ளது உள்ளபடியே படமாக எடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் பிரபல தெலுங்கு இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா. இதில் சாய்பாபா வேடத்தில் நடிக்க பிரகாஷ்ராஜை தேர்வு செய்துள்ளனர். பல கோடி பக்தர்கள் வணங்கி வந்த சாய்பாபா சமீபத்தில் மரணமடைந்தார். அவருக்கு நாடெங்கிலும் பக்தர்கள் உள்ளனர். தங்கள் வாழ்க்கையில் சாய்பாபா பல்வேறு அற்புதங்கள் செய்ததாகக் கூறி வழிபடுகின்றனர். அவை அனைத்தும் காட்சிப்படுத்தப் படுகிறது. சாய்பாபா மறைவுக்குப் பிறகு அங்கிருந்த பணத்தை கடத்தியதாக மடத்துப் பிரமுகரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இது போன்ற சர்ச்சைகளையும் இந்தப் படத்தில் வைக்கின்றனர். இந்தப் படத்தை அரசியல் பிரமுகரான ஹரிராம் ஜோகையா தயாரிக்கிறார். படப்பிடிப்பை புட்டபர்த்தி ஆசிரமத்தில் நடத்த அனுமதி கேட்டுள்ளனர். அனுமதி கிடைக்காவிட்டால் அதுபோன்ற அரங்குகள் அமைத்து எடுக்கப் போகிறார்களாம்.



மங்காத்தா அனைவருக்கும் விசேடமான படம். அஜித்துக்கு இப்படம் 50 ஆவது படம். வெங்கட்பிரபு பிரபல நடிகரை வைத்து இயக்கும் முதல் படம். இது வெற்றி பெற்றால் தான் அவரது வாழ்க்கையில் அடுத்தக் கட்டத்துக்குச் செல்ல முடியும். இவர்கள் இருவரையும் போலவே மங்காத்தாவை முக்கியமான படமாகக் கருதுகிறார் படத்துக்கு இசையமைத்திருக்கும் யுவன் சங்கர்ராஜா. படத்தின் பாடல் வெளியீடு குறித்து அறிவித்ததும் திருப்பதி சென்று மொட்டை போட்டிருக்கிறார் யுவன். மங்காத்தாவுக்காகத்தான் இந்த மொட்டை என்றும் இல்லை. இது வேறு தனிப்பட்ட விடயம் என்றும் இருவேறு கருத்துகள் உலவுகின்றன வி.ஐ.பி.க்களின் மொட்டையும் சர்ச்சையை உருவாக்கும் என்பது இதுதானோ?

யுவன் யுவதி – பரத், ரீமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாவனாவின் ஏக்கம்


தமிழ் சினிமாவில் நடிக்கத் தெரிந்த நல்ல நடிகைகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் பாவனா. ஆனால் தெலுங்குக்குப் போகிறேன் என்று போனவர் இப்போது காணாமலே போய்விட்டார். தமிழிலும் வாய்ப்பில்லை. தற்போது மலையாள படங்களில் நடித்து வருகிறார். தமிழில் நடிக்க தனக்கு நல்ல வாய்ப்பை யாரும் தரவில்லையே என்கிறார் பாவனா. இது குறித்து அவர் கூறுகையில்; தேவையில்லாத கிசுகிசுக்கள் எனது திரை வாழ்க்கையை மாற்றிவிட்டன. தமிழில் நான் கடைசியாக நடித்த படம் அசல். அப்படத்துக்கு பின் சில வாய்ப்புகள் வந்தாலும் ஒன்றும் சொல்லிக் கொள்கிறமாதிரி அமையவில்லை. நல்ல வாய்ப்பிருந்தால் சொல்லுங்கள். சம்பளத்தை பெரிதாகக் கருதாமல் நடிக்கத் தயாராக உள்ளேன். ஆனால் ஒரு போதும் கவர்ச்சி ஆபாச வேடங்களில் நடிக்க மாட்டேன் என்றார்.



தமிழ், தெலுங்கில் ஸ்ரேயாவுக்கு படங்களிலில்லை. ஒரே படமான ரௌத்ரம் முடிந்து வெளியாகத் தயாராக உள்ளது. இதைவிட்டால் வேறு படங்களில்லை. இந்நிலையில் இவரது போதைப் படங்கள் இணையத்தளத்தை ஆக்கிரமித்துள்ளன. பார்ட்டி ஒன்றில் அளவுக்கு மீறி குடித்துவிட்டு ஸ்ரேயா தள்ளாடியப் படங்கள் என்று அதனை குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஸ்ரேயாவை ஆத்திரப்படுத்தியுள்ளது. அந்தப் படங்களில் உள்ளது நான் அல்ல, மார்ஃபிங் செய்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மன்னிப்புக் கேட்கவில்லை என்றால் வழக்குப் போடுவேன் என்றிருக்கிறார். இது ஸ்ரேயாவின் இந்த வார வருத்தம். மகிழ்ச்சி... ஸ்ரேயாவுக்கு புதிய படம் ஒன்று கிடைத்துள்ளது. தெலுங்கில் தயாராகும் இந்தப் படத்தில் அல்லரி நரேஷுக்கு ஜோடியாக நடிக்கிறார்.

## கவுண்டமணியின் தாயிடம் ஆசிபெற்ற விஜய்

சினிமா படப்பிடிப்புக்காக கவுண்டமணியின் சொந்த ஊருக்குச் சென்ற நடிகர் விஜய், அங்கு கவுண்டமணியின் தாயாரிடம் ஆசி பெற்றார். இயக்குநர்



'ஜெயம்' ராஜா இயக்கத்தில் விஜய், ஹன்சிகா மோத்வானி, ஜெனிலியா நடிக்கும் புதிய படமான 'வேலாயுதம்' படத்தின் சூட்டிங் பொள்ளாச்சியிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் நடந்து வருகிறது. அங்குள்ள வல்லகுண்டாபுரத்தில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன. கதைக்கு பொருத்தமாக இருந்ததால் அவ்வூரைத் தேர்வு செய்தனர். விஜய்யின் தங்கையாக நடிக்கும் சரண்யா மோகன் திருமண காட்சியை அங்கு எடுத்தனர். அப்போது ஊரே தங்கள் வீட்டுத் திருமணம் போல் பாவித்து வீட்டுக்கு வீடு அலங்காரம் செய்து கோலம் போட்டுத் தோரணம் தொங்க விட்டு இருந்தனர். சீரியல் லைட்டுகளும் போட்டு இருந்தார்கள். தத்ரூபமாக எடுக்கப்பட்ட இந்த காட்சிகளுக்கு கிராம மக்கள் மிகவும் ஒத்துழைத்திருக்கிறார்கள் படப்பிடிப்பின்போது அந்தக் கிராமத்தில் தான் நகைச்சுவை நடிகர் கவுண்டமணியின் வீடு உள்ளது என்று விஜய்யிடம் தெரிவித்தனர். உடனடியாக விஜய்யும் படத்தின் இயக்குநர் ராஜாவும் கவுண்டமணி வீட்டுக்குச் சென்றனர். அங்கு கவுண்டமணியின் தாயார் இருந்தார். அவரிடம் விஜய் உடல் நலம் விசாரித்து வாழ்த்து பெற்றார். சிறிது நேரம் அவரிடம் பேசிக் கொண்டு இருந்தார். பின்னர் கவுண்டமணி வீட்டிலும் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. வல்லாகுண்டபுரத்தில் ஒரு கிணறு வெட்டி சில காட்சிகளை எடுத்தனர். படப்பிடிப்பு முடிந்ததும் அந்தக் கிணற்றை அந்தக் கிராமத்துக்கே தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரன் அன்பளிப்பாக கொடுத்துவிட்டார், அந்த ஊரில் உள்ள மாசாணி அம்மன் கோவிலுக்கு ஊர் மக்கள் விஜய்யை அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்கு பரிவட்டம் கட்டி விஜய்யை கௌரவித்து அனுப்பியிருக்கிறார்கள். விஜய்யின் வேலாயுதம் படம் படப்பிடிபுக்காக வல்லகுண்டபுரம் கிராமமே விழாக்கோலம் பூண்டு இருந்தது.



ஷர்மி



'ரெண்டு' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமாகி, 'அருந்ததீ' படத்தின் மூலம் வெற்றிப்பட நாயகியாக வலம் வந்து கொண்டிருப்பவர் நடிகை அனுஷ்கா. அருந்ததீயில் ஆவியை அழிக்கும் வேடத்தில் நடித்த அனுஷ்கா, பின்னர் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இப்போது மீண்டும் வித்தியாசமான வேடமொன்றில் நடித்து வருகிறார். அம்மணி தற்போது 'ராம்பச்சோதாவரம்' என்ற படத்தில் ஆக்ஷன் வேடத்தில் நடிக்கிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம் என 3 மொழிகளில் இப்படம் உருவாகிறது. இது பற்றி அப்படத்தின் தயாரிப்பாளர் கிருஷ்ணமராஜு கூறுகையில்; 1930 இல் பிரிட்டிஷாரை எதிர்த்து போராடிய வீரப் பெண்ணைப் பற்றிய கதை. பாரவி இப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார். இக்கதையை அனுஷ்காவிடம் கூறியதுமே உடனே நடிக்க ஒப்புக்கொண்டார். வீரமிக்க இளைஞர்களை தலைமை தாங்கி வழிநடத்தும் வேடத்தில் அனுஷ்கா நடிக்கிறார். சைதன்யா டான்டலூரி இயக்கும் இப்படத்திற்கு மணிசர்மா இசையமைக்கிறார். அருந்ததீ போலவே இப்படமும் பேசப்படும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் மனசின் ஆழம் என்ன?



பெண்களின் மனதை கொள்ளை கொள்வது எப்படி? என்பது அநேக ஆண்களின் கவலை. என்னென்னவோ செய்தும் இந்த பெண்களை எளிதில் கவர முடியவில்லையே என்பதுதான் இன்றைய தலைமுறை இளைஞர்கள் சிலரது ஆதங்கம். இதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அநேக வேடங்களை போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பினை பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேக ஆண்களின் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது.

உண்மையாக இருந்தால் மட்டுமே பெண்களை எளிதில் கவரமுடியும் என்று பலருக்கு தெரிவதில்லை. பெண்களின் மனதை கவருவது எப்படி என்பது குறித்து உங்களுக்காக சில யோசனைகள்.

**கவர முயற்சிக்க வேண்டாம்**

இது என்ன விளையாட்டு? என்று ஏராளமானோர் கேட்பது காதில் விழுகிறது. நிஜமாகவே இது உண்மைதான். நாம் எதற்காகவாவது அதீத முயற்சி செய்தால் அது கிடைக்கும் வரை நமக்கு போராட்டம்தான். பெண்கள் விடயத்தில் இது ஒரு படி மேலாகவே இருக்கும். பெண்களை கவர நீங்கள் பெரும் முயற்சி செய்யாமல் இருந்தாலே வெற்றி உங்கள் பக்கம்தான். இதுதான் பெண்களை கவருவதற்கான முதல் ரகசியம்.

நீங்கள் உங்கள் வேலையில் உண்மையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வெற்றி பெற்றாலே அனைவரின் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பும். பெண்களின் கவனத்தையும் எளிதில் கவரலாம். இந்த ரகசியத்தை புரிந்து கொள்ளாமல் ஏராளமான ஆண்கள் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு பெண்களிடையே வெறுப்பை சம்பாதிக்கின்றனர்.

**புத்திசாலித்தனத்தை நிரூபியுங்கள்**

பணமும், விலை உயர்ந்த பரிசுப் பொருட்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று அநேக ஆண்கள் தவறாய் கணக்கு போடுகின்றனர். நீங்கள் பணத்தினால் பெண்களைக் கவர முயலும் பட்சத்தில் உங்களை விட உங்கள் பணத்தின் மீதுதான் பெண்களின் கவனம் இருக்கும். ஆகவே உண்மையான புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தை பெற முயற்சி செய்வதே சிறந்த வழி.

**புதிதாக சிந்தியுங்கள்**

பெண்களின் மனதை கவரவேண்டும் என்பதற்காக எத்தனையோ ஆண்கள் பகீரத பிரயத்தனம் செய்கின்றனர். அதையெல்லாம் கண்டு வெறுப்புற்றிருக்கும் பெண்களிடம், நீங்களும் பழைய பாணியைப் பின்பற்றி முயற்சி செய்தால் கதைக்கு உதவாது! எனவே இயல்பாக இருந்து உங்களின் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துங்கள். பெண்களைக் கவரவேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்தி பேசாதீர்கள். நிறைய படித்து விடய ஞானத்தோடு பேசுங்கள். உலக நடப்புகளை அப்டேட் செய்து கொள்ளுங்கள்.

**தோற்றம் முக்கியம்**

என்னதான் புத்திசாலியாக இருந்தாலும் தோற்றத்திலும் சிறிது கவனம் செலுத்த வேண்டும். சுத்தமான உடை, கம்பீரமான தோற்றம் போன்றவையும் ஆண்களைப்பற்றி பெண்களிடையே ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். உங்களின் தோற்றத்திற்கும் செயல்பாட்டிற்கும் ஒத்துப்போகவேண்டும். அதற்காக மிகைப்படுத்தப்பட்ட அலங்காரமோ, செயல்பாடுகளோ தேவையில்லை. சுத்தமாக இருங்கள். உங்கள் எண்ணங்களை இயல்பாய் வெளிப்படுத்துங்கள். அத்தகைய ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

**பெண்களின் மன ஆழம்**

பெண்களின் மனதை புரிந்து கொள்வது என்பது எவராலும் முடியாது. எத்தனையோ அறிஞர்களும், ஞானிகளும் கூட இந்த விடயத்தில் தோற்றுத்தான் போகின்றனர். ஆண்களின் எண்ணத்திற்கு எதிராகத்தான் அநேக பெண்கள் சிந்திக்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக பெண்களின் மனதைக் கவர ஆண்கள் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கின்றனர். என்னதான் பெண்களுக்குப் பிடிக்கும்? என்று குழம்பித்தான் போகின்றனர் ஆண்கள். இன்றைய 21 ஆம் நூற்றாண்டு இளைஞர்களிடையும் இந்த சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது. எனவே மேற்கொண்ட ஆலோசனைகளை பின்பற்றினாலே நீங்கள் பெண்களின் உள்ளம் கவர் கள்வன் ஆவது நிச்சயம்.

இதேவேளை அன்பும், அரவணைப்பும் நிறைந்த வாழ்க்கைதான் நிறைவானது என்று பெரும்பாலான பெண்கள் கருதுகின்றனர். தன் வாழ்க்கைத் துணைவரிடம் இருந்து வெறும் உடல்ரீதியான தொடர்பை மட்டுமே அவர்கள் விரும்புவதில்லை. நேசம் மிகுந்த வார்த்தைகளைத்தான் பெண்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

இந்த விடயம் ஆண்களுக்குத் தெரியாமல் போகும்போதுதான் கருத்து மோதல்கள் ஏற்படும், விரிசல்கள் தோன்றுகின்றன. பெண்களின் மனதை புரிந்து கொண்டு உரிமையோடு நேசத்தை வெளிப்படுத்தினால் உறவுகள் வலுப்படும் என்கின்றனர் உளவியல் வல்லுநர்கள்.

**ஆறுதலாய் பேசுங்கள்**

பேச்சுதான் பெண்களின் விருப்பத்திற்குரிய செயல். திருமணத்திற்கு முன்பு வரை உறவுகளோடு, நண்பர்களோடும் சந்தோசமாய் பேசிக்கழித்த பொழுதுகள் அடிக்கடி பெண்களின் நினைவுகளில் நிழலாடும். இது போன்ற சமயங்களில் ஆறுதலாய் பேசினால் அது பெண்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும். உங்களின் காதலையும், அன்பையும் முதலில் பேச்சின் மூலம் வெளிப்படுத்துங்கள். நடந்து கொண்டே படிப்பது எத்தனை சுகமானதோ அதுபோல இல்லறத் துணையுடன் நடந்து கொண்டே பேசுவது இனிமையானது. நீண்ட தூரம் நடந்தபடி பேசுவது என்பது இருவரது மனங்களையும் இலேசாக்க உதவும். இருவரும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள, அந்த நடைப் பேச்சு உதவும்.

**இதய சிம்மாசனம்**

திருமணம் செய்தவர்களின் வாழ்க்கையில் உடலுறவு என்பது பிரிக்க முடியாதது. எந்த வித வருத்தமும், வலியும் இன்றி அதனை அனுபவிக்க வேண்டும். இந்த விடயத்தில் பெண்களை ஜெயித்த ஆண்கள் நிரந்தரமாக பெண்களின் இதய சிம்மாசனத்தில் அமரலாம். தனது வாழ்க்கைத் துணைவர் தன்னிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அனைத்து பெண்களுக்குமே ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். பல விடயங்களை அவர்கள் மனதுக்குள் கற்பனை செய்து பார்த்திருப்பார்கள். எனவே உறவுக்கு முன்பும் சரி, உறவின்போதும் சரி ஆண்கள் பெண்களிடம் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

**விளையாட்டாக விளையாடுங்கள்**

பெண்களைப் பொறுத்தவரை மன ரீதியான திருப்தியையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஆண்களோ, காரியம் முடிந்தவுடன் மறந்து விடுவார்கள் சற்று முன் நடந்ததை. ஆனால் பெண்கள் அப்படி இல்லை. அந்த இனிய உணர்வின் நினைவுகளில் சில மணி நேரங்களாவது மூழ்கிக்கிடப்பார்கள்.

மடியில் தலைசாய்ப்பது, விரலால் தலைகோதுவது, அன்பான ஆறுதலான முத்தம், என சின்னச் சின்ன ரொமான்ஸ்கள் பெண்களுக்குப் பிடித்தமானவை. இவற்றை நிறையப் பேர் நிறையச் செய்வதில்லை. இதில்தான் சிக்கலே ஆரம்பிக்கிறது.

நேரடியாக விடயத்தை தொடங்குவதை விதம் விதமான முன் விளையாட்டுகளை விளையாடுங்கள். இந்த எதிர்பார்ப்புகளை நிறைவு செய்தாலே உறவுகளில் விரிசல் விழ வாய்ப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் அதிவேக ரொக்கெட் விமானம்




அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் போக்குவரத்து நேரம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே செல்கிறது. இதில் அடுத்த புரட்சியாக 'ரொக்கெட் பிளேன்' உருவாகவிருக்கிறது.

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'ஈ.ஏ.டி.எஸ்.' ஜப்பான் நாட்டுடன் இணைந்து இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.புதிய 'ரொக்கெட் பிளேன்' பற்றி ஈ.ஏ.டி.எஸ்.கூறுகையில், 'கார்பன் வெளியேற்றம் மிகவும் குறைந்த 'ஹைபர்சோனிக் போக்குவரத்து' என்று தெரிவித்துள்ளது.

இந்த 'ரொக்கெட் பிளேன்' மூலம் உலக நாடுகளுக்கு இடையே அதிவேகத்தில் பயணிக்க முடியும்.உதாரணமாக ஆசியக் கண்டத்தில் உள்ள ஜப்பானின் டோக்கியோவில் இருந்து ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள பாரிஸுக்கு இரண்டரை மணி நேரத்தில் சென்று விடலாம்.

இந்த விமானத்தில் 50 முதல் 100 பயணிகள் வரை பயணிக்கலாம்.இது சாதாரண என்ஜினைக் கொண்டே 'டேக்-ஆப்' ஆகும்.அதற்கான எரிபொருள்,கடற்பாசிகளில் இருந்து தயாரிக்கப்பட்ட உயிர் எரிபொருளாக இருக்கும்.தரையில் இருந்து சாதாரண என்ஜினால் எழும்பும் விமானம் பின்னர் ரொக்கெட் என்ஜினால் செயல்படத் தொடங்கும்.

அந்த ரொக்கெட் என்ஜின் ஒக்சிஜனையும் ஹைட்ரஜனையும் எரிபொருளாகப் பயன்படுத்தும்.எனவே என்ஜினில் இருந்து வெளியேறுவது வெறும் நீராவியாக மட்டுமே இருக்கும்.

இன்றைய விமானங்கள் பூமிப்பரப்பில் இருந்து 10 ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறக்கின்றன என்றால் இந்த ரொக்கெட் பிளேன் 32 கிலோமீற்றர் உயரத்தில் பறக்கும்.

கீழே இறங்குவதற்கு ரொக்கெட் என்ஜின் அணைக்கப்பட்டு மெதுவாகப் பூமி நோக்கித் தாழும்.தரையை நெருங்கியதும் சாதாரண என்ஜினை பயன்படுத்தி இறங்கும்.

என்ன ரொக்கெட் பிளேனில் பயணிக்கத் துடிக்கின்றீர்களா?கொஞ்சம் பொறுங்கள். இதற்கான மாதிரியே 2020ஆம் ஆண்டளவில்தான் தயாராகும். 2050ஆம் ஆண்டில் மக்கள் போக்குவரத்துக்கு வரும்.

# மனித உணர்வுகளை இனம் கண்டறியும் நாய்கள்

மனிதர்களின் உணர்ச்சிகளை நாய்கள் இனம் கண்டறிந்து கொண்டு அதற்கேற்ப நடந்துகொள்வதாக நியூசிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. மகிழ்ச்சியான மற்றும் கோபமான மனிதர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளையும், சிரிக்கின்ற மற்றும் அழுகின்ற மனிதர்களுக்கு இடையே எழும் வேறுபாடுகளையும் நாய்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமாம்.

தெற்கு தீவில் உள்ள ஓடாகோ பல்கலைக்கழகம் 90 டியூடின் வகை நாய்களை ஆய்வுக்கு உட்படுத்தியது ஆய்வின் போது குழந்தைகளின் சிரிப்பு, அழுகை, கொஞ்சல் போன்ற உணர்வுகளை பதிவு செய்தும் மனிதர்களின் பல்வேறுபட்ட உணர்வுகளை பிரதிபலிக்கும் படங்களையும் நாய்களிடம் காட்சிப்படுத்தினர் ஆய்வாளர்கள்.

உடல்மொழியை வெளிப்படுத்தும் நாய்கள்

அந்த காட்சியில் இருந்த உணர்வுகளை நாய்களை புரிந்து கொண்டு உணர்ச்சிகளை சரியாக வெளிப்படுத்தியதாக டெட் ரப்மென் என்ற அவுஸ்திரேலிய பேராசிரியர் தெரிவித்துள்ளார். மனிதர்களின் உணர்வுகளை உடனடியாக புரிந்து கொள்வதில் நாய்கள் மிகச்சிறந்தவை என்று ஓடாகோவில் இருந்து வெளிவரும் டெய்லி டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். மனித உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப நாய்கள் அவற்றின் உடல்மொழியை வெளிப்படுத்தியதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**நன்றியுள்ள பிராணிகள்**

நாய்கள் நன்றியுள்ளவை, விசுவாசம் மிக்கவை அதனால்தான் உலகம் முழுவதும் செல்லப்பிராணியாக வளர்க்கப் படுகின்றன. வீட்டு எஜமானர்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு அதற்கேற்ப காரியங்களை நிறைவேற்றுவதில் கில்லாடிகளாக உள்ளன. இது நாய்களிடம் இயல்பிலேயே அமைந்துள்ள சிறப்பம்சமாகும்.



கோவில் என்றதும் நம் நினைவுக்கு வருவது சாமி சிலைகள் மற்றும் பூஜை புனஸ்காரங்கள்.ஆனால் பார்த்ததும் அச்சம் தரும் அபசகுனமாக கருதப்படும் சவப்பெட்டிகளை வைத்து சடங்கு சம்பிரதாயம் செய்யும் கோவில் ஒன்று இருக்கிறது.என்னடா இது கோவிலின் உள்ளே சவப்பெட்டிகளா?என்று ஆச்சரியமாக உள்ளதா?

பாங்கொக் நகரில்

# சவப்பெட்டி வழிபாடு




இருந்து 66 மைல் தொலைவில் உள்ளது வாட்புரோமனி என்ற பகுதி.அங்குள்ள புத்தர் கோவிலில் சவப்பெட்டிக்குள் சிறிதுநேரம் படுத்து எழும்பினால் மறு பிறவி எடுக்கலாம் என்று நம்பப்படுகிறது.இது உலகிலேயே எங்கும் இல்லாத புதுமை,இந்த சடங்கு முறையை தொடங்கிய 6 வருடங்களிலேயே இந்தக் கோவில் பிரபலம் அடைந்துள்ளது.


இந்தச் சடங்கின் மூலம் வாழ்க்கையில் படும் கஷ்டங்களை எல்லாம் களைந்து மறுபிறவி எடுப்பது போன்ற புத்துணர்ச்சியைப் பெறலாம் என்று மக்கள் நம்புகின்றனர்

கஷ்டங்கள்,கவலைகள் உள்ள நபர்கள் இந்த கோவிலுக்கு வந்து அங்கு வைக்கப்பட்டுள்ள சவப்பெட்டிக்குள் 1-1/2 நிமிடம் கண்களை மூடி மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும்.அப்போது அவர்கள் மீது சவப்போர்வையால் மூடி விடுவார்கள்.சவப்பெட்டியின் உள்ளே மந்திரங்கள் ஒலிக்கப்படும்.பின்னர் அவர்கள் சிறிது நேர வழிபாட்டிற்கு அனுமதிக்கப்படுவர்.இந்த வழிபாட்டை முடித்ததும் அவர்கள் புத்துயிர் பெறுவதாக நம்புகின்றனர்.

இந்த கோவிலுக்கு வந்து சவப்பெட்டி வழிபாடு செய்தால் மரண பயம் நீங்கி விடும் எனற நம்பிக்கை மக்களிடம் பரவுவதால் ஏராளமான மக்கள் இங்கு வந்து இந்த 'விசேட' வழிபாட்டை செய்கிறார்கள்.இந்த சடங்குக்காக வரும் பக்தர்கள் கோவிலுக்கு சிறு அளவிலான காணிக்கை மட்டும் செலுத்துகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளும் இன்டர்நெட்டும்

குழந்தைகள் இன்டர்நெட்டில் தங்கள் நேரத்தை எந்த விதத்தில் செலவிடுகின்றனர் என்பதை பெற்றோர் கண்காணிப்பது மிகவும் முக்கியமாகும். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற விடயங்களைப்பற்றி குழந்தைகள் அறிந்துகொள்ள இன்டர்நெட் உதவினாலும் தவறான வழிகளில் செல்லவும் இது உதவுகிறது.

குழந்தைகள் இன்டர்நெட்டை சரியான முறையில் உபயோகிக்க பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டியவை;

குழந்தைகளின் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது, பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் நடவடிக்கைகளைப் பற்றி கேட்டுக்கொள்வதே இல்லை. இதனால் குழந்தைகள் வழி தவறும் போது பெற்றோருக்குத் தெரியாமலே போகிறது.

குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடுவது;

குழந்தைகள் மனதில் எழும் சந்தேகங்களையும் குழப்பங்களையும் தீர்க்கவும், குழந்தைகளின் விருப்பங்களை அறியவும் அவர்களுடன் அதிக நேரம் செலவிட வேண்டும். அவர்களை சரியான பாதையில் அழைத்துச் செல்லவும் இது உதவும்.

கம்பியூட்டரை பொதுவான இடத்தில் வைப்பது;

கம்ப்யூட்டரை குழந்தைகளின் அறையில் வைப்பதை தவிர்ப்பது நல்லது. தனிமையில் இருக்கும்போது தவறானவற்றை பார்க்கலாமே என்ற எண்ணம் தோன்றும்.

கம்பிட்டரில் செலவிடும் நேரத்தை விதிப்பது;


இவ்வளவு நேரம் தான் கம்ப்யூட்டரில் குழந்தைகள் செலவிட வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். அவர்கள் விரும்பும் நேரத்தில் கம்ப்யூட்டரை உபயோகிக்காமல் இருக்க 'பாஸ்வேர்ட்' உதவும்.

இன்டர்நெட் உபயோகத்தை கண்காணிப்பது;

வீட்டில் இன்டர்நெட்டுக்கு தடை விதித்தால் குழந்தைகள் சைபர் கஃபேகளுக்குச் செல்லலாம். அங்கு பெற்றோர்கள் அவர்களை கண்காணிக்க முடியாமல் போகும். இதனால் தடுப்பதை விட கண்காணிப்பது சிறந்தது.

குழந்தைகளுக்கு நல்ல முறையில் புரிய வைப்பது அவசியம். அதிகமான கண்டிப்பும் தவறான பாதைக்கு அவர்களை அழைத்துச் செல்லலாம்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# மயக்க மருந்து கொடுக்காமல் அறுவை சிகிச்சை...!

மருத்துவ உலகில் சாதனைகள் தொடர்கதையாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒரு சாதனை படைக்கப்படுகிறது.அந்த வரிசையில் இப்போது மயக்க மருந்து கொடுக்காமல் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வது.

குறித்த ஆய்வில் வெற்றி கிட்டியுள்ளது.நோயாளிகளை இயல்பு நிலையில் வைத்து அவர்களின் சிந்தனைகளை சிதறடித்து கவனத்தை மாற்றி அறுவைசிகிச்சை செய்யும் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளது. பரிசோதனை அடிப்படையில் வெற்றி கிடைத்துள்ளது என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த முறை பெரிதும் உதவும் என்பதும் மருத்துவத் தரப்பின் கணிப்பு இந்த முறை விசுர்வல் ரியாலிட்டி தெரபி எனப்படும்.

அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்பு இது புதிய முறை குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது; இந்த முறையில் நோயாளிகளின் முகத்தில் கண்கள் விளையாட்டை மட்டுமே பார்க்க்கூடிய வகையில் மாஸ்க் போன்ற சாதனம் பொருத்தப்படும்.

வீடியோ கேம் விளையாடத் தெரியாதவர்களும் இதை எளிதாக கையாள முடியும். இதன் மூலம் அவர்கள் கவனம் [illegible] இருக்கும். முதலில் அவர்கள் கவனம் முழுவதும் விளையாட்டில் செலுத்தப்படும்.


ஒரு கட்டத்தில் அவர்கள் விளையாட்டில் ஊன்றிவிடுவர். ஸ்னோ வேர்ல்ட் என்ற பெயரில் லோ இம்மர்ஷன்,ஹை இம்மர்ஷன் என 2 வகை விளையாட்டுகள் உள்ளன.

இந்த முறையில் அறுவைசிகிச்சை தன்மைக்கு ஏற்ப நோயாளிகளுக்கு வீடியோ விளையாட்டுக்கள் நிர்ணயிக்கப்படும் 60 வயதை கடந்த 25 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இந்த முறையில் மேற்கொள்ளப்பட்ட அறுவைசிகிச்சையினால் தங்களுக்கு வலி இல்லை என்றே அவர்கள் தெரிவித்தனர்.

விர்சுவல் ரியாலிடி என்ற தெரபி முறையில் நோயாளிகளுக்கு ஓபரேஷன் மேற்கொள்ளப்படும் போது மயக்க மருந்து கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு வலி தெரியாமல் இருக்க புதிய முறையில் இவர்களின் கவனம் வேறு செயல்களில் திருப்பப்படும் .

உதாரணமாக அவர்களை வீடியோ கேம் விளையாட வைத்து அதில் இவர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடும் போது அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படும் வலியை அவர்கள் உணர்வதில்லை. அறுவைசிகிச்சை செய்யும் நேரமும் மிகவும் குறைவு என்கிறார் ஆராய்ச்சி குழுவைச் சேர்ந்த மயக்க மருந்து நிபுணர் சாம்ஷரா.

# சனிக்கிரகத்தில் உப்பு நீர் ஏரி



கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு சனிக்கிரகத்தில் உள்ள என்செலாடஸ் என்ற சந்திரனில் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அங்கு வெந்நீர் ஊற்றுகளும், ஐஸ் கட்டிகளும் இருப்பதைக் கண்டறிந்தனர்.

இந்த நிலையில் ஜேர்மனியைச் சேர்ந்த ஹெய் டெல்பெர்க் பல்கலைக்கழக வானவியல் விஞ்ஞானி பிராங் போஸ்ட் பொர்க் தலைமையில் நிபுணர்கள் அந்த நீர் ஊற்றுகள் அங்குள்ள ஏரியில் இருந்து உற்பத்தி ஆவதாகக் கண்டு பிடித்துள்ளனர்.

இதற்கு முன்பு என்செலாடஸ் சந்திரனில் இருக்கும் ஐஸ் படிவங்களை நாசா விண்வெளி மையத்தின் காசினி விண்கலம் போட்டோ எடுத்து அனுப்பியது. அதன் மூலம் நடத்தப்பட்ட ஆய்வில் அந்த ஐஸ் கட்டியில் அதிக அளவு உப்புப் படிவங்கள் இருப்பதை விஞ்ஞானி பிராங்க் போஸ்ட் பெர்க் தலைமையிலான நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.


எனவே இங்கு உப்பு நீர் ஏரி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்த உப்புப் படிவங்களில் 30 சதவீதம் என்செலாடஸ் சந்திரனின் நீரூற்றுகளில் உள்ளது. நீரூற்றுகள் 2 ஏரிகளில் இருந்து வருகின்றன. அதில் ஒன்று என்செலாடஸ் மேற்பரப்பின் அருகே அமைந்திருக்க வேண்டும் என்றும் இது மிகவும் பெரியதாகவும், ஆழமாகவும் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# பிள்ளைப் பாசம்

வீரபாஸ்கரன்



வாசுகி கோப்பி டம்ளரை உறிஞ்சியபோது உதடு சுட்டு நாக்கு எரிய 'ஸ்... ஆ...' என கத்தினாள்.கூடவே அவள் தம்பி சந்தீப்பும் கத்த சத்தம் கேட்டு சுரேந்தர் ஓடி வந்தான்.

''ஐயோ என்னாச்சுப்பா...?'' பதறினான்.

''சுட்டுருச்சிப்பா...'' பிள்ளைகள் இருவரும் கோரஸாக சொல்ல ஆத்திரமானான். ''பாரதி...ஏய்...பாரதி....!''

பதறிப்போய் ஓடிவந்தாள்.

'ஏ...என்னங்க''

''என்ன நொண்ணங்க..?இவ்வளவு சூடா காபி குடுத்தா புள்ளைங்க குடல் என்னாகும்?''

''சாரிங்க''

''நீ ஒவ்வொரு தடவை தப்பு பண்ணும்போதும் இதையே தான் சொல்ற...'' எரிந்து விழுந்தான். அவனே கோப்பியை குழந்தைகளுக்கு ஆற்றிக் கொடுத்தான்.பாரதி அவர்களை பரிதாபமாக பார்க்க குழந்தைகள் அவளை விரோதி போல் பார்த்தனர்.

''என்னடியம்மா ஒரே சத்தமாயிருக்கு'' என்றபடி எதிர்வீட்டு மீனாட்சி பாட்டி வந்தாள். அவளைப் பார்த்ததும் பாரதி கண்கள் கலங்க ஆரம்பித்தன.

''நீ ஏண்டியம்மா கலங்குற... பொறுப்பு இல்லாத உன் புருஷன் தான் அழணும்... என்னடா இரண்டாம் தாரத்து புள்ளைங்களை மனைவி இவ்வளவு அக்கறையா கவனிக்கிறாளே நாம எப்படி வைச்சுக்கணும்னு அறிவு வேண்டாம்...?''

'பாட்டி''

''ஆமா பேசாம நீயும் ஒரு புள்ளைய பெத்துக்க. எல்லாம் அடங்கிப்போயிடும்''

''இல்ல பாட்டி....இதுவும் என் குழந்தைங்கதானே''

''நீ நினைக்கிற... அவனும் அவன் புள்ளைகளும் நினைக்கலியே. அதுக உன்னை சித்தி மாதிரிதானே நினைக்குதுங்க...''

''நினைச்சுட்டுப் போகட்டும் பாட்டி.. எப்ப என்னை அம்மான்னு ஏத்துக்குதோ அது வரையும் காத்திருக்கேன்''

''என்னவோ போ... இன்னும் புரியாதவளாயிருக்க... எப்பதான் புரிஞ்சுக்கப் போறியோ'' சலிப்பு வார்த்தைகளில் சொன்னாள் மீனாட்சி பாட்டி.

இரவு.

பாரதி சுரேந்தரின் முதல் மனைவி அலமேலு போட்டோவை கழற்றிவிட்டு சரஸ்வதி போட்டோவை மாட்டி வைத்தாள்.

இரவு 10 மணிக்கு சுரேந்தர் வந்தான்.

''புள்ளைங்க சாப்பிட்டிருச்சா?''

''இல்லீங்க,வேண்டாம்னு பிடிவாதம் பண்ணுது!''

அப்போது குழந்தைகள் வந்தார்கள்.

''என்னடா கண்ணுகளா சாப்பிடலையா..?''

''இல்லைப்பா சாப்பாடு வேண்டாம்'' கோரஸாக சொல்ல,

''ஏன் அப்பா லேட்டா வந்தேன்னு கோபமா...?''

''இல்லை''

''பின்ன''

''அம்மா போட்டோவை காணோம்''. அப்போதுதான் சுரேந்தர் மேலே பார்த்தான். சரஸ்வதி போட்டோவை பார்த்ததும் பதறினான்.

''பாரதி என்ன பண்ணியிருக்கே?''

''எ..என்ன?''

''போட்டோவை ஏன் மாத்துன?'' துடித்துப் போய் கத்தினான்.

''நான்தான் மாற்றினேன். குழந்தைங்க அவங்க அம்மா போட்டோவை பார்த்து பார்த்து அழுறாங்க. அம்மா எங்கேன்னு கேட்குதுங்க''

''ச்சே படிச்சிருந்தும் இப்படி அறிவு கெட்டதனமாயிருக்கியே...எவ்வளவு தான் நாம செஞ்சாலும் புள்ளைங்க உடனே மாறாது. அதுக்கு பொறுமை வேணும். சகிப்புத்தன்மை வேணும். இதெல்லாம் உனக்கு எங்க புரியப்போகுது?'' பாரதி நொறுங்கிப் போனாள்.

''ராத்திரி நேரத்துல புள்ளைங்களை பட்டினி போடக்கூடாது, உடம்பு போயிடும்.அதுக்குதான் உன்னை கல்யாணம் பண்ணிக்கும்போதே சொன்னேன். குழந்தைகள்தான் எனக்கு முக்கியம்னு.நீ மாறலை.இனிமே அவங்களை கவனிக்க ஒரு வேலைக்காரியை ஏற்பாடு பண்ணிடுறேன்''

''ஐயய்யோ வேண்டாங்க'' பதறிப் போனாள்.

அன்றிரவே பாரதி சரஸ்வதி போட்டோவை கழட்டிவிட்டு அலமேலு போட்டோவை மாற்றி வைத்தாள்.

மதியம் வீட்டு வேலைகளை முடித்த களைப்பில் பாரதி சற்றே கண்ணயர்ந்தாள். அப்போது போன் அடித்தது. பாரதி எடுத்து பேசினாள்.

எதிர்முனையில் அவள் அம்மா. ''நல்லாயிருக்கியா பாரதி...'' அம்மாவின் கனிவில் பொசுக்கென அழுது எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்துவிட்டாள்.

அம்மா சொன்னாள். ''பாவம்மா அதுங்க,பச்சை புள்ளைங்க.அதுகளுக்கு ஒண்ணும் புரியாது.இரண்டாவது உன் புருஷன் அப்பாவி.குழந்தை குழந்தைனு அதுக மேல உயிரையே வைச்சுருக்கார்.குடும்பம்னா எல்லாம் நடக்கும்.நாமதான் புரிஞ்சுக்கிட்டு புருஷனோட ஒத்துப் போகணும்'' என்றவள் பாரதியிடம் தாழ்ந்த குரலில் ''பேசாம நீ கருத்தடை ஆபரேசன் பண்ணிக்கயேன்.உனக்கு உன் மூத்தாள் குழந்தைங்க மேல அன்பிருக்குன்னு நிரூபிக்க இதைவிட சரியான ஒரு யோசனை எனக்குத் தோணலடியம்மா!''

அம்மா சொன்னதில் அதிர்ந்தாலும் ''பெற்றால்தான் பிள்ளையா? என் கணவரின் 2 பிள்ளைகளும் இனி என் பிள்ளைகளாகவும் இருக்கட்டுமே'' என்று தோன்ற ''சரிம்மா'' என்றபடி போனை வைத்தாள்.

காலையில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி வைத்தாள். புருஷன் அலுவலகம் போனதும் வெளியே வந்தாள்.

ஆட்டோவை அழைத்தாள்.

''அரசு மருத்துவமனைக்கு போப்பா''

அவள் அரசு மருத்துவமனையில் இறங்கிய அதேநேரம் பள்ளிக்கு மட்டம் போட்டுவிட்டு வாசுகியும் சந்தீப்பும் வெளியூர் பஸ் ஒன்றின் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந்தார்கள்.

''சந்தீப்! சித்தி பேச்சை அப்பா கேட்கறார். நம்மகிட்ட சரியா பேசறதில்ல''

''ஆமாமா அம்மா இருந்திருந்தா இப்படி ஆகுமா?''

''அதுக்குத்தான் நம்ம அம்மாவோட அம்மா ஊருக்கு போறோம். இனிமே இங்கே வரவே கூடாது.''

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைந்தே வந்துவிடு

உளம் சார்ந்த உறவு;
உடல் தொட்ட பிணைப்பு

என்னுள் வாழும்
என் மன்னவனே!
போர் மேகங்கள்
என் உயிரைச் சுமந்து
வெகுதூரம் சென்று;

எத்தனை விடியல்கள்
எத்தனை பௌர்ணமிகள்
எத்தனை சூரியோதயங்கள்
நாட்காட்டியில் கிழிபட்ட
தாள்கள் தான் எத்தனை.

தபால் சேவகர்
நம் வீடு தாண்டும்போது
என் இதயக்கடலில்
முட்டி மோதும்
துயர அலைகள்
எத்தனை? எத்தனை?

நீ
தந்த உன் உயிர்
என்!
தோள் மீதும்
மடிமீதும்
கால்கள் உதைத்து;
நீ சென்ற திக்கில்
தளிர்க் கரம் நீட்டி
பொக்கை வாய் திறந்து;
மழலை மொழியில்;
ஏதேதோ சொல்கிறது;

என்னால்!
பதிலுரைக்க
தெரியவில்லை;
துயரமதை
தாங்கிக் கொள்ள
முயன்றும்; முடியவில்லை

வேதனையின் விளிம்பில்;
இரவு; பகலாய்;
எத்தனை திங்கள்
முடியவில்லை;
முடியவில்லை;

வான் மழையின்
வரவுக்காய்
காத்திருக்கும்
பாலை நிலம் போல்

உன் வரவு
நிகழும் வரை
நானும் காத்திருப்பேன்;
உன் உயிரும்;
பார்த்திருக்கும்.

உயிர் மூச்சுக் காற்றை
உன் சுவாசப் பைதனில்
முழுமையாய் நிரப்பி;
விரைந்தே வந்துவிடு
நாங்கள் சுவாசிக்க.

**கற்பிட்டி வஹாப்**

## மௌன மொழி

நீ என்ன மொழியில்
பேசினாலும்
என்னால்
புரிந்து கொள்ள
முடிகிறது
உந்தன் மைவிழிகள்
பேசிடும்
மௌனமொழி
ஒன்றைத் தவிர...!

**செல்வநாயகம்
ரவிசாந்,
வீரமனை,
குப்பிளான்.**






## விழிகள்

என் பாசமுள்ள கனவே– நீ
நலமாயிருக்க இறைவனை வேண்டுகிறேன்
உன் முகம் நெஞ்சமதில் வளர்பிறையாய்
நித்திரையின்றி கழிகின்றன – பல
ஊமை இரவுகள்
பார்த்த கணமே பறிபோன என் இதயம் – உன்
பார்வைக்காக ஏங்குகின்றது.
நேற்று வருவாய் என்றுதான் நம்பியிருந்தேன்
நீ வரவில்லை ஏன் என்மேல் – கோபமா?
நிறைய அழுதுவிட்டேன்– தெரியுமா?
இனியும் என்னால் எழுத முடியவில்லை – உன்
பதில்கண்டு தொடருகிறேன்
இப்படிக்கு உண்மையுள்ள
விழிகள்...

**வட்டுக்கோட்டை
ரி.றூபா(அன்பு)**

## நானும் அன்னையும்

தாயும் கருணையும்
வேறில்லை
தவமும் ஞானமும்
பேறில்லை
தாய்மையின் அன்பிற்கு
ஈடேதுமில்லை
தத்துவம் சொன்னால்
நிகரேதுமில்லை
தூய மனதால்
தொட்டிலிடுவாள்
தோளில் எனைச்
சுமந்து மகிழ்ந்திடுவாள்
பட்டினி கிடந்தென்
பசி போக்கிடுவாள்
பாரினில் எனை
உயர வைத்தாள்
அவளே...
என் பாசமுள்ள அன்னை

**க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்**

## வெறுத்தேன்

மனதில் கசக்கும் உறவுகளை வெறுத்தேன்
வேஷம் போடும் மனிதரை வெறுத்தேன்
தாய் இல்லாத நாட்களை வெறுத்தேன்
போலியாக பழகும் நங்கைகளை வெறுத்தேன்
தோல்வியைக் கண்டு துவழும் மனதை வெறுத்தேன்
கண்ணீர் கொள்ளும் கண்களை வெறுத்தேன்
ஏசத்துடிக்கும் சொற்களை சொல்ல வெறுத்தேன்
கற்க சோம்பலாகும் மூளையை வெறுத்தேன்
சிலருக்காக விட்டுக் கொடுக்கும் தன்மையை வெறுத்தேன்
பெண்களே உலகம் எனத் திரியும் -
ஆண்களை வெறுத்தேன்
தப்பிக்க நினைக்கும் நபர்களை வெறுத்தேன்
நானே என்ற நிலையை வெறுத்தேன்
காதலில் கூறும் பொய்களை வெறுத்தேன்
கல்யாண வாழ்வில் விவாகரத்தை வெறுத்தேன்
பெற்றோர் கண்டிக்காத தவறுகளை வெறுத்தேன்
வெற்றி கொள்ள வேண்டிய தோல்விகளை வெறுத்தேன்

**மகாலக்ஷ்மி ஜெகதீஸ்வரன்
மூளாய்:.**

## உன்னால் எனக்குள் நித்தம் யுத்தம்

உனக்குப் புரியாத
புதிர் நான்...
எனக்கோ... நீ
அசர வைக்கும் அதிசயம் !

வியப்புக்குள் அழைத்து
வியர்க்கவைத்து சுழற்றும்
சூறாவளியாகி...

ஆசையாக பேசுகிறாய்
அன்பாலே அணைக்கிறாய்
பாசத்தாலே உபசரிக்கிறாய்
பக்கம் வர மறுக்கிறாய்

யாசகனாக பேசுகிறாய்
யோசிக்க வைத்து
வதைக்கிறாய்
பூவைப் போல் மணக்கிறாய்
பூகம்பமாக வெடிக்கிறாய்!

சிற்றின்பம் தருகிறாய்
சிறகடித்துப் பறக்கையில்...
சிதற வைத்து சிரிக்கிறாய்!

ஞாபகங்களை சிதைக்கிறாய்
நான் உறங்கும் போதும்...
கனவில் வந்து என்னைக்
கலைத்து
கை நீட்டி அணைக்கிறாய்!

காரணமே இல்லாமல்
காயப்படுத்தி விடுகிறாய்
கண்கலங்கி நிற்கையில் ...
கண்டு கொள்ளவும்
மறுக்கிறாய்!

உன்
இம்சைக்குள் அல்லல்
உறுகையில்
சரி... நெருங்கிவிடுவோம்
என நினைக்கையில்

நான் உண்மையுள்ள
உன்னைச் சுட்டி வரும்
விம்பமென விடையும்
பகிர்கிறாய்!

பின் முத்தம் அல்ல
இரத்தம் தந்த என்னை
உயிர்ப் பித்தாலும்...

உன் சத்தங்கள் கேட்கையில்
நான் சாவதொன்றே...
எனக்குள் நித்தம் நித்தம்
நிகழும் யுத்தம்!

**பரகடுவ
கே.எம். சம்ஸ்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு–15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத விளையாட்டுப் பிள்ளை





74 வயதாகும் இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி ஒரு நாளைக்கு 5 முறை செக்ஸ் உறவு கொள்ளும் அளவுக்கு உடல் வலு உடையவர்.செக்ஸ் 'வெறி' நிரம்பியவர் என்று அவரது டாக்டர் உம்பர்டோ ஸ்கேபாக்னினி கூறியுள்ளார்.

இத்தாலி பிரதமர் பெர்லுஸ்கோனியின் காதல் லீலைகள் இத்தாலியர்களை விட மற்ற நாட்டவர்களுக்குத் தான் நிறையத்தெரியும்.அந்த அளவுக்கு பெர்லுஸ்கோனியின் காதல் களியாட்டங்கள் குறித்த செய்திகள் வராத நாளில்லை.

மிலன் நகருக்கு அருகே உள்ள அவரது பண்ணை வீட்டில் தினசரி விருந்துகள் களை கட்டும்.அழகிகள்,விபசார அழகிகளைக் கூட்டி வந்து கும்மாளமிட்டு வருவார் பெர்லுஸ்கோனி.அப்படித்தான் 17 வயதேயான கரீமா எல் மஹரோக் என்ற பெல்லி டான்சரை பணம் கொடுத்து கூட்டி வந்து ஆட வைத்து இப்போது வம்பில் சிக்கியுள்ளார், வழக்கில் மாட்டியுள்ளார் பெர்லுஸ்கோனி.

அவரை தனது மிலன் பண்ணை வீட்டுக்கு பணம் கொடுத்து வரவழைத்த பெர்லுஸ்கோனி தனது கட்சி எம்.பி.யும் தனது நெருங்கிய தோழியுமான நிக்கோல் மின்னட்டியுடன் ஆட வைத்து வேடிக்கை பார்த்துள்ளார்.அப்போது கரீமாவை மின்னட்டிக்கு உதட்டு முத்தம் கொடுக்கச் செய்து கை கொட்டி ரசித்தாராம்.

இந்த விவகாரம் தற்போது நீதிமன்றுக்கு வந்துள்ளது.இந்த நிலையில் பெர்லுஸ்கோனியின் செக்ஸ் திறமை குறித்து அவரது டாக்டர் ஒருவர் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் பெர்லுஸ்கோனிக்கு வயது 74 ஆகிறது.ஆனால் அவரை விட 15 வயது குறைந்தவருக்கு எப்படிப்பட்ட செக்ஸ் ஆர்வம்,வேகம் இருக்குமோ அதே அளவில்தான் பெர்லுஸ்கோனியும் உள்ளார்.அவரால் ஒரு நாளைக்கு ஐந்து முறை உறவு கொள்ள முடியும்.அவருக்கு 60 வயதுக்கும் குறைவு என்று யாராவது சொன்னாலும் கூட நம்பலாம்.அந்த அளவுக்கு 'தெம்பானவர்' தான் பெர்லுஸ்கோனி என்றார் அந்த டாக்டர்.

அவர் சொல்வது மிகையானதல்ல என்று தான் தோன்றுகிறது.மிலன் விருந்துகளின் போது சில நேரம் 30 இற்கும் மேற்பட்ட பெண்களுடன் ஜாலியாக இருப்பாராம் பெர்லுஸ்கோனி.அவரது முகத்தில் களைப்பே தெரியாத அளவுக்கு படு ஜாலியாக வலம் வருவாராம் அழகிகளுடன்.

ஆனால் கரீமா எனக்காக வந்து ஆடினார் என்பதெல்லாம் கட்டுக்கதை என்று 'ஒன்றுமே தெரியாத உலகநாதன்' மாதிரி பேசிக் கொண்டிருக்கிறார் பெர்லுஸ்கோனி.

இத்தாலிக்காரராச்சே, பைசா கோபுரம் மாதிரி 'சாய்ஞ்சாலும்' விழாமல் தெளிவாகத் தான் இருக்கிறார்.

# ஏடாகூட தலைப்புகளுடன் களமிறங்கும் கவர்ச்சிப் படங்கள்



இரண்டு ஆண்டுகளாக சிறிய பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டுள்ள 200 க்கும் மேற்பட்ட தமிழ்ப் படங்கள் வியாபாரம் ஆகாததாலும், தயாரிப்பாளர்களால் நேரடியாக வெளியிட முடியாததாலும் பெட்டிக்குள் முடங்கிக் கிடக்கின்றன. இதனால், சிறிய பட்ஜெட் தயாரிப்பாளர்கள் கதைக்காக படங்களை எடுப்பதைவிட, கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து படம் எடுத்தால் தியேட்டரில் 15 நாட்கள் ஓடினால் போதும், கணிசமான பணம் பார்த்து விடலாம் என்ற நினைப்பில் 'ஏடாகூட' தலைப்புகளுடன் கவர்ச்சிப் படங்கள் எடுக்கக் களமிறங்கியுள்ளனர்.

கணவனின் தம்பியை விரும்பும், அண்ணியை மையமாக வைத்து கடந்த வருடம் 'உயிர்' படமும், மாமனாரை விரும்பும் மருமகளை மையமாக வைத்து 'சிந்து சமவெளி' படமும் இளம்பெண்ணை பலான நோக்கத்தில் இம்சிக்கும் 'மிருகம்' படங்களும் வந்தன. இப்படங்கள் சர்ச்சைகளில் சிக்கினாலும், தயாரிப்பாளர்களை நஷ்டப்படாமல் காப்பாற்றிவிட்டது என்று கோலிவூட்டில் அப்போது பேசப்பட்டது. ஆனாலும், இடையில் சில மாதங்கள் கவர்ச்சிப் படங்கள் ஏதும் வெளிவரவில்லை. தற்போது, நடிகைகளின் கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் சாந்தி அப்புறம் நித்தியா, இளம் காதல், அரங்கேற்ற நாள், ஒரு சந்திப்பில், அநாகரிகம் படமும், பல வருடங்களுக்கு முன் மலையாளத்தில் ஜெயபாரதி நடித்த 'ரதிநிர்வேதம்' படம் தற்போது ஸ்வேதா மேனன் நடிப்பில் மீண்டும் மலையாளத்திலும், தமிழிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் இப்படிப்பட்ட படங்களை தணிக்கைக் குழு எப்படி அனுமதிக்கிறது என்று விசாரித்தபோது தணிக்கைக் குழுவுக்கு வரும் படங்களில் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் வகையில் காட்சிகள், வசனங்கள் இருந்தால் தயவு, தாட்சண்யமின்றி வெட்டி விடுவோம். இப்படிப்பட்ட பல படங்கள் மற்ற மாநிலங்களில் தணிக்கை செய்யப்பட்டு வந்துவிடுகின்றன. இதனால் படம் வெளியாகும் வரை இப்படங்கள் குறித்து ஏதும் நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. தியேட்டர்களுக்கு ரசிகர்களை இழுப்பதற்காக இப்படங்களுக்கு தயாரிப்பாளர்கள், நடிகைகளின் 'கவர்ச்சி' படங்களை போட்டு, விளம்பரம் செய்யும் நிலையும் உள்ளது. பொலிஸார் இதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்கின்றனர் தணிக்கைக் குழுவினர்.

பெயர் வெளியிட விரும்பாத கவர்ச்சிப்பட விநியோகஸ்தர் ஒருவர் கூறும்போது; 'கவர்ச்சிப் படங்களை பார்ப்பதற்கு தனி ரசிகர்கள் கூட்டமே உள்ளது. இந்தப் படங்களை எல்லா தியேட்டர்களிலும் வெளியிட முடியாது. குறிப்பிட்ட சில தியேட்டர்களில் மட்டும் தான் வெளியிட முடிகிறது. 15 நாட்கள் ஓடினால் போதும், படத்திற்கு போட்ட பணத்தை எடுத்துவிடலாம். நாங்கள் நடிகையின் கவர்ச்சிப் படங்களை விளம்பரத்தில் பயன்படுத்தினாலும் பலான், 'பிட்' படங்கள் ஏதும் படத்தில் இணைப்பதில்லை. இப்படங்களை வெளியிடும் தியேட்டர்காரர்கள் 'பிட்' படம் சேர்த்து ஓட்டினால் அதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்' என்றார்.

எனவே, இளைய சமுதாயம் சீரழிவுப் பாதையில் சிக்கிவிடாமல் இருக்க தணிக்கைக் குழு அதிகாரிகளும் பொலிஸாரும் முனைப்புடன் செயற்பட்டு வரம்பு மீறாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககாற அடித்த சிக்ஸ்

கிரிக்கெட் சபை குறித்து வெளிப்படையாக விமர்சித்த முன்னாள் கப்டன் சங்ககாராவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இலங்கை அணி நாடு திரும்பும் போது அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க விளையாட்டுத்துறை அமைச்சுத் தயாராகி வருகிறது. இதன் மூலம் இலங்கைக் கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இருப்பது உறுதியாகிவிடுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக் கிரிக்கெட் அணி இங்கிலாந்து சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. லோர்ட்சில் நடந்த எம்.சி.சி.கிரிக்கெட் உத்வேக சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அணியின் முன்னாள் கப்டனும் நட்சத்திர வீரருமான சங்ககாரா பேசுகையில்; இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகத்தை வெளிப்படையாக விமர்சித்தார்.

'இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகிகளாக இருப்பவர்கள் தங்கள் சுயநலத்துக்காக வீரர்களிடையே பிளவை ஏற்படுத்தி தங்கள் சொந்தக் காரியங்களை நிறைவேற்றுகிறார்கள். சில வீரர்கள் அதிகாரத்துக்காக சபை நிர்வாகிகளுடன் கைகோர்க்கிறார்கள். இதனால் அணியின் வீரர்கள் மத்தியில் பிளவே ஏற்படுகிறது.

இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகம் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் சுயநலம் இல்லாததாகவும் இருக்கவேண்டும். சபையின் செயற்பாட்டில் அரசியல் தலையீடு கூடாதென்று ஐ.சி.சி.அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது' என்று சங்ககாரா காரசாரமாகக் குறிப்பிட்டார்.

41 வயதான ஜெயசூரியாவை 2 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் சேர்த்ததால் சங்ககாரா தனது கண்டனத்தை மறைமுகமாக வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சங்ககாராவின் பேச்சு கடும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்தா அளுத்கமகே உத்தரவிட்டுள்ளார். இது குறித்து மகிந்தானந்தா அளுத்கமகே அளித்த பேட்டியில்;

கிரிக்கெட் சபை ஒப்பந்த வீரரான சங்ககாரா சபை குறித்து வெளிப்படையாக விமர்சித்து பேசக்கூடாது. கிரிக்கெட் மற்றும் கிரிக்கெட் நிர்வாகம் குறித்து எதுவும் பேசவேண்டுமென்றால் அவர் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். சங்ககாராவின் பேச்சுக் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யும்படி இலங்கைக் கிரிக்கெட் சபைத்தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.




இலங்கைக் கிரிக்கெட்டில் அரசியல் தலையீடிருப்பது வெளிப்படை. நீண்டகாலமாகக் கிரிக்கெட் சபைக்குத் தேர்தலை நடத்தாது இடைக்கால சபையே இலங்கையில் கிரிக்கெட்டை கட்டுப்படுத்துகிறது. இதனை முன்னரும் பலர்கடுமையாகக் கண்டித்திருந்தனர்.

ஆனால், குமார் சங்ககாரா உலகிற்கு இதனை உரத்துக் கூறியது இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும் விளையாட்டுத் துறை அமைச்சருக்கும் மட்டுமல்ல இலங்கை அரசுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

# இந்திய– பாகிஸ்தான்

## கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு தேவை

அரசியல் தலையீட்டின் மூலம் மட்டுமே இந்தியா-பாகிஸ்தான் அணிகளிடையே கிரிக்கெட் போட்டியை மீண்டும் தொடங்க முடியுமென்று பாகிஸ்தான் அணிக்கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் நிலைமை இன்று அந்த நாட்டு விளையாட்டை பெரிதும் பாதித்துவிட்டது. அதுவும் குறிப்பாக இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் என்பது தற்போது கேள்விக்குறியாகி விட்டது. இந்த நிலைமை பாகிஸ்தான் அணியை கவலை கொள்ள வைத்துள்ளது.

இது குறித்து தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் மிஸ்பாஉல் கூறியிருப்பதாவது;

இந்திய-பாகிஸ்தான் இடையில் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் தொடங்கினால் தான் ஐ.பி.எல்.சாம்பியன்ஸ் லீக் உள்ளிட்ட போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவதற்கு கதவுகள் திறக்கப்படும்.

இந்திய-பாகிஸ்தானிடையே மீண்டும் கிரிக்கெட் போட்டியை தொடங்குவது என்பது வீரர்களின் கைகளிலோ கிரிக்கெட் சபை நிர்வாகிகளின் கைகளிலோ இல்லை. அரசியல் தலையீடு ஒன்றால் மட்டுமே மீண்டும் போட்டியை நடத்த முடியும்.

சர்வதேச கிரிக்கெட்டில் பாகிஸ்தான் முன்னணி அணியாக இருந்ததுபோதும். ஐ.பி.எல். போட்டியில் அனுமதி மறுக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது. அது எங்களை வெறுப்படையச் செய்துள்ளது.

இந்த விடயத்தில் என் ஒருவரால் எதுவும் செய்ய முடியாது. இரு நாடுகளுக்குமிடையிலான உறவு எப்போதுமே அரசியல் மூலமாகவே தீர்மானிக்கப்படுகிறது. இந்தியாவுடன் கிரிக்கெட் விளையாடுவது வருவாய் ரீதியாக முக்கியமானது. இந்தியாவுக்கெதிராக கிரிக்கெட் விளையாடுவது எப்போதுமே சிறப்பானது. பாகிஸ்தான் வீரர்கள் இப்போது இந்தியாவுக்கு எதிராக விளையாட முடியாமல் உள்ளனர்.

இரு அணி வீரர்களிடையே எந்தப் பிரச்சினையுமில்லை. போட்டியின் போது ஒருவருக்கொருவர் அருகருகில் இருந்து ரசிக்கிறோம். ஆனாலும் இரு நாட்டு மக்களிடம் இருந்து பெரியளவில் எதிர்பார்ப்பு எழுவதால் வெற்றி பெற வேண்டுமென்ற நெருக்கடி வீரர்களிடையே காணப்படுகிறது என்றார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமல் செய்யும் தவறா?

கொமன்வெல்த் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற இந்திய வீராங்கனைகள் மன்தீப் கௌர், சினி ஜோஸ் உட்பட 8 பேர் ஊக்கமருந்து உட்கொண்டது தெரியவந்தது. இதையடுத்து அவர்களை இடைநிறுத்தும் உத்தரவிட்டது இந்திய தடகள சம்மேளனம்.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களுக்கு ஊக்கமருந்து எப்படி வந்தது, இதில் யாருக்கெல்லாம் தொடர்புள்ளது எனப் பல்வேறு கோணங்களில் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக தேசிய விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பஞ்சாப் மாநில அரசும் அதிரடி நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

பஞ்சாப் பாட்டியாலாவில் உள்ள



தேசிய விளையாட்டு மையம் அருகில் உள்ள மருந்துக் கடைகளில் புதன்கிழமை அதிரடி சோதனை நடத்தப்பட்டது. அப்போது 3 கடைகளில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை மும்பையில் விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட இந்திய பற்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால், ஊக்கமருந்து விவகாரம் குறித்து கூறியதாவது;

பல தடகள வீரர், வீராங்கனைகள், பளுதூக்கும் வீராங்கனைகள் ஊக்க மருந்து பயன்படுத்துவது எனக்குத் தெரியும். அவர்களே இதை என்னிடம் கூறியிருக்கிறார்கள். இருப்பினும் ஊக்க மருந்து சோதனையில் சிக்கும் பலருக்கு தாங்கள் உட்கொள்ளும் மருந்துகள் தடை செய்யப்பட்டவையா? என்பது பற்றி அதிகமாகத் தெரிவதில்லை. இது உண்மையிலேயே வருத்தத்திற்குரியது.

ஒவ்வொரு வீரர், வீராங்கனைகளுக்கும் உலக ஊக்கமருந்து தடுப்பு கழகத்தின் விதிகள் தெரியும். இது பொதுவானது. அதன் இணையத்தளத்தில் எந்த மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளது. எவை தடை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றினைக் கூட அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

ஏனெனில் நிறையத் தடகள வீராங்கனைகள் பளுதூக்கும் வீரர், வீராங்கனைகள் போதிய படிப்பறிவு இல்லாதவர்கள். இதனால் அவர்கள் தங்களின் பயிற்சியாளர்கள் என்ன மருந்துகள் உட்கொடுத்தாலும் அதை அப்படியே எடுத்துக் கொள்கிறார்கள். இந்த விடயத்தில் நான் மிகுந்த கவனத்துடன் செயற்படுகின்றேன்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டால் எந்த ஒரு மருந்தை உட்கொள்வதற்கு முன்பும் அது குறித்து எனது உடல்தகுதி நிபுணர் மற்றும் டாக்டர்களிடம் ஆலோசித்து பிறகு உட்கொள்வேனென்றார்.

ஆசிய வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இவ்வாறு அடிக்கடி சிக்குவது வழமையாகி விட்டது. சகல விளையாட்டுகளிலும் தற்போது ஊக்கமருந்து சோதனை வந்து விட்டதால் தற்போது இது பெரும் தலைவலியாகி விட்டது.




# போட்டிக்கு முன் போட்டி

## வெற்றி பெற்ற முஸ்லிம் வீராங்கனை

அமெரிக்காவைச் சேர்ந்த முஸ்லிம் வீராங்கனையொருவர் ஹிஜாப் அணிந்த நிலையில் பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றும் உரிமைக்கான போராட்டத்தில் சர்வதேச ரீதியான வெற்றியை பெற்றுள்ளார்.

ஜோர்ஜியா மாநிலத்தைச் சேர்ந்த 35 வயதான குல்சூம் அப்துல்லா எனும் வீராங்கனையே இச்சவாலை எதிர்கொண்டிருந்தார். இவ்விவகாரம் தொடர்பாக நீண்டகாலமாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இந்நிலையில் தற்போது ஹிஜாப் அணிந்து கொண்டு போட்டிகளில் பங்குபற்றுவதற்கு சர்வதேச பளுதூக்கும் சம்மேளனம் (ஐ.டபிள்யூ.எவ்) அனுமதி வழங்கியுள்ளது.

இச் சம்மேளனம் பெண்கள் போட்டிகளில் பங்குபற்றும் போது கைகள் மற்றும் கால்களை மறைத்துக் கொள்ளும் விதத்தில் ஆடை அணிவதற்கு ஏற்ப புதிய விதிகளை அங்கீகரித்துள்ளது. குல்சூம் அப்துல்லா கணினி பொறியியலில் கலாநிதி பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பளுதூக்கும் வீராங்கனையான இவர் ஜோர்ஜியா டெக் நிறுவகம் சார்பில் போட்டிகளில் பங்குபற்றும் போது ஹிஜாப் அணிந்திருந்ததால் சர்ச்சை ஏற்பட்டது. அவர் ஹிஜாப் அணிந்து போட்டிகளில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டது.

இதையடுத்து வீராங்கனைகளுக்கான ஆடைகள் தொடர்பாக விதிகளில் மாற்றம் செய்யுமாறு அமெரிக்க ஒலிம்பிக் குழுவையும் அமெரிக்க பளுதூக்கும் சம்மேளனத்தையும் தனிப்பட்ட ரீதியில் அவர் வலியுறுத்தி வந்தரர்.

இறுதியில் வீராங்கனைகளுக்கான ஆடை விதிகளில் மாற்றம் செய்யுமாறு அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற கூட்டமொன்றின்போது சர்வதேச பளுதூக்கும் சம்மேளனத்திடம் அமெரிக்க ஒலிம்பிக் குழு வலியுறுத்தியது..



தற்போது குல்சூம் அப்துல்லாஹ் அமெரிக்காவின் சிரேஷ்ட தேசிய பளுதூக்கும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை பெற்றுள்ளார்.

இது தொடர்பில் அவ் வீராங்கனை மிகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். 'இம்மாற்றம் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளேன். இவ் விடயத்தில் உதவியவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இதிலுள்ள ஒரு சாதகமான விடயம் என்னவென்றால், இச் சம்பவமானது அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆடை விதி மாற்றம் ஏனைய வகை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் பெண்களுக்கும் உதவியாக அமையுமென நான் நம்புகின்றேன்.

எந்தவொரு விளையாட்டிலும் ஒரு பெண் தனது கை, கால்களை மறைத்துக் கொண்டேனும் போட்டிகளில் பங்குபற்ற இயலுமென்றால் அதுசிறந்ததாகும் என குல்சூம் அப்துல்லாஹ் கூறியுள்ளார்.

அட்லான்டா நகரைச் சேர்ந்த குல்சூம் அப்துல்லா பாகிஸ்தானைச் சேர்ந்த பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறந்தவர். போட்டிகளுக்கான மாற்றுவகை ஆடைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் வீடியோவொன்றையும் அமெரிக்க ஒலிம்பிக் குழுவிடம் அவர் சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது அயோவா மாநில பளுதூக்குதல் போட்டியில் பங்குபற்றுவதற்கு குல்சூம் தயாராகி வருகிறார்.

சர்வதேச பளுதூக்குதல் சம்மேளன்த்தின் தலைவர் டமாஸ் அஜான் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்; நியாம் மற்றும் சமத்துவம் மற்றும் அனைவரையும் இணைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விதி மாற்றம் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் அமெரிக்காவின் இலக்கு

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

லிபியாவில் நேட்டோவின் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 100 நாட்களுக்கு மேல் கடந்துவிட்ட போதிலும் அங்கு எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

லிபியத் தலைவர் முஅம்மர் கடாபிக்குச் சொந்தமான சில கட்டிட வளாகங்கள் தரைமட்டமாக்கப்பட்டதைத் தவிர வேறெந்த இலக்கும் இதுவரை இங்கு எட்டப்படவில்லை.

பொதுமக்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் மேற்குல வல்லரசு நாடுகளினால் ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கையில் பொதுமக்கள் கொல்லப்படுவது பகிரங்கமாகிவிட்ட நிலையிலும் கூட தாக்குதல் தொடருமென நேட்டோ சூளுரைத்துள்ளது.

இதேவேளை குறுகியகால இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கை மிக நீண்ட காலத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதும் அதனால் ஏற்படும் செலவீனங்களும் நேட்டோ உறுப்பு நாடுகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகளையும் தோற்றுவித்துள்ளது.



கடாபியின் மகனுடன் மெஹ்ராகி

ஆனால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் கடாபி அதிகாரத்தை விட்டோ அல்லது நாட்டை விட்டோ வெளியேறும் வரை தாக்குதல்களை தொடர்வதில் உறுதியாக உள்ளன.

கடாபியின் வளாகங்களை இலக்கு வைத்து நேட்டோ விமானங்கள் நாளாந்தம் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்ற போதிலும் கூட, கடாபியின் இராணுவக் கட்டமைப்பை இதுவரை பலவீனப்படுத்த முடியவில்லை.

நேட்டோவின் விமானத் தாக்குதல்களின் உதவியுடன் கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் தனது இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் கடாபி அவ்வப்போது எச்சரிக்கைகளை விடுத்த வண்ணமே இருக்கிறார்கள்.

விமானத் தாக்குதல்கள் தவிர தந்திரோபாய ஆலோசனை மற்றும் ஆயுத உதவிகள் என்பவற்றை மேற்குலக நாடுகள் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கி வரும் நிலையிலும் கள நிலைவரங்களில் எதிரெதிர் தரப்பினரது பலம் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கிறது.

தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள அதேவேளை கடாபியின் படைகள் அதிநவீன ஆயுதங்களின் பலத்தைக் கொண்டுள்ளன.

இதனால் களநிலைவரங்கள் அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும் அதேவேளை கடாபி அமைதியான முறையில் அதிகாரத்தைக் கைவிடுவதற்கான முயற்சிகளை பிராந்திய நாடுகள் முன்னெடுத்து வருகின்றன.


எனினும் கடாபி ஏற்றுக்கொள்ளும் சமாதானத் திட்டத்தை கிளர்ச்சியாளர்கள் நிராகரிப்பதும் கிளர்ச்சியாளர்கள் இணங்கும் திட்டத்தை கடாபி நிராகரிப்பதுமாக நிராகரிப்புக்களே தொடர்ந்த வண்ணமுள்ளன.

கடாபி அதிகாரத்தைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்பதில் உறுதியாக இருந்த கிளர்ச்சியாளர்களின் தலைமைத்துவம் தற்போது கடாபி அனைத்து அதிகாரங்களையும் கைவிடும் பட்சத்தில் பாதுகாப்பாக நாட்டில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவாரெனத் தெரிவித்துள்ளது.

## பொதுமக்களின் பாதுகாப்பா? மெஹ்ராகியின் கைதா?

லிபிய நிலைவரம் இவ்வாறிருக்கையில் லிபிய நடவடிக்கையில் அமெரிக்க தலையீட்டின் நோக்கம் குறித்து தற்போது சந்தேகம் எழ ஆரம்பித்துள்ளது.

பொது மக்களைப் பாதுகாத்தல், ஜனநாயகத்தை நிலைநாட்டல் போன்ற கோஷங்களுடன் கடாபிக்கு எதிரான நடவடிக்கையை அமெரிக்கா ஆரம்பித்த போதும் லொக்கர் பீ குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியை அமெரிக்காவுக்கு கொண்டுவருவதே அதன் உண்மையான இலக்காக இருக்கலாமெனத் தற்போது கருதப்படுகிறது.



லிபியக் கிளர்ச்சியாளர்களுக்கும் ஒபாமா நிர்வாகத்திற்குமிடையிலான இரகசிய உடன்பாடொன்று வெளிச்சத்திற்கு வந்ததைத் தொடர்ந்தே இச் சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்கக் காங்கிரஸின் சிரேஷ்ட வட்டாரங்களினால் கசிய விடப்பட்ட இத் தகவல்களின் பிரகாரம் அமெரிக்காவின் ஆதரவைக் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்தும் பெறுவதற்கு திரிபோலிக்குள் [லிபியாவின் தலைநகர்] கிளர்ச்சியாளர்கள் நுழையும் பட்சத்தில் அவர்கள் மெஹ்ராகியைக் கைது செய்து அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது அமெரிக்காவின் நிபந்தனையாக உள்ளது.

மெஹ்ராகியைக் [வயது 59] கைது செய்வதில் அமெரிக்கா ஏன் இவ்வளவு தீவிரத்துடன் இருக்கிறது?

1988 இல் இடம்பெற்ற பெருமளவான அமெரிக்கர்கள் உள்ளிட்ட 270 பேரின் உயிர்களைப் பலிக்கொண்ட லொக்கர் பீ விமானத் தகர்ப்பு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளியாக இனங்காணப்பட்டவரே லிபியாவின் முன்னாள் புலனாய்வுத் துறை அதிகாரியான இந்த அப்தில் பஸெட் அல் மெஹ்ராகி.

லொக்கர் பீ விமானத் தகர்ப்பு தாக்குதலின் சூத்திரதாரியாக குற்றஞ்சாட்டப்பட்டு 2001 இலிருந்து ஸ்கொட்லாந்தில் சிறைத் தண்டனை அனுபவித்து மெஹ்ராகியை மனிதாபிமானத்தை காரணம் காட்டி கருணை அடிப்படையில் 2009 ஆகஸ்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் விடுதலை செய்தது.

இத் தாக்குதலில் பெருமளவான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருந்தமையினால் மெஹ்ராகியின் விடுதலையை அமெரிக்கா கடுமையாக எதிர்த்திருந்தமைக்கு மத்தியிலும் மருத்துவ ரீதியான காரணங்களை காட்டி பிரிட்டன் அவரை விடுதலை செய்தது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள மெஹ்ராகி 3 மாதங்கள் மட்டுமே உயிர்வாழ்வாரென்பதால் மருத்துவர்களின் பரிந்துரைக்கேற்ப மெஹ்ராகியை விடுதலை செய்வதாக பிரிட்டன் தெரிவித்தது.

ஆனால் மெஹ்ராகியின் விடுதலையின் பின்னணியில் லிபியாவின் எண்ணெய் வளத்துடன் தொடர்புடைய பிரிட்டனின் வர்த்தக நலன்களே இருப்பதாக அப்போதே விமர்சனங்கள் எழுந்திருந்தன.

அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் மீறி 2009 இல் விடுதலை செய்யப்பட்ட மெஹ்ராகி இன்று வரை உயிருடன் இருப்பது அமெரிக்காவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ் விமானத் தகர்ப்புச் சம்பவத்தில் பலியான அமெரிக்கர்களின் குடும்பங்களும் மெஹ்ராகி விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீட்டை வலியுறுத்தி வருகின்றனர்.

இதனடிப்படையிலேயே மெஹ்ராகியைக் கைது செய்து அமெரிக்காவுக்கு கொண்டு வரும் திட்டத்தை அமெரிக்கா முன்னெடுத்துள்ளது.

திரிபோலியிலுள்ள டமாஸ்கஸ் மாவட்டத்தில் மெஹ்ராகி தனது மனைவி மற்றும் மக்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் கிளர்ச்சியாளர்கள் மெஹ்ராகியைக் கைது செய்து அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அரேபிய நாடொன்றினூடாக அவர் அமெரிக்காவுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் விசாரணைகளை எதிர்கொள்ளும் மெஹ்ராகியின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அங்கு அவருக்கு மீண்டும் ஆயுள் தண்டனை விதிக்கப்படுமென நீதித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் கிளர்ச்சியாளர் திரிபோலிக்குள் நுழையும் பட்சத்தில் மெஹ்ராகி அவர்களிடம் சிக்காமல் தடுப்பதற்காக கடாபி மெஹ்ராகியை தனது வசிப்பிடத்திற்கு கொண்டு செல்வார் அல்லது கைதாவதற்கு முன்னர் மெஹ்ராகி கொல்லப்படுவாரென்ற ஊகங்களும் வெளியிடப்படுகின்றன.

அதாவது அமெரிக்காவிடம் மெஹ்ராகி சிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை கடாபி இயன்ற வரை மேற்கொள்வாரென்றே நம்பப்படுகிறது.

எனினும் சாத்தியமான வரையில் மெஹ்ராகியைக் கைது செய்வதற்கான முயற்சிகளை அமெரிக்கா முன்னெடுத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே பொதுமக்களைப் பாதுகாப்பது என்ற போர்வையில் மெஹ்ராகியைக் கைது செய்வதற்கான அமெரிக்காவின் இலக்கு இரகசிய உடன்பாடுகள் மூலம் அம்பலமாகியுள்ளது.

தனது சொந்த நலன்களுக்கு அப்பால் ஏனைய மக்களின் நலன்களையோ அல்லது மற்றைய நாடுகளின் இறையாண்மையைப் பற்றியோ கூட சிறிதும் கவலைப்படாத அமெரிக்கா லிபிய மக்களைப் பாதுகாப்பதற்காக களமிறங்குகிறது என்றால் அதன் பின்னணியில் நிச்சயமாக வேறொரு காரணம் இருக்குமென்பது அதன் நடவடிக்கைகளிலிருந்தே கற்றுக் கொண்ட பாடமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கார்த்திகா







இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org